
# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு 1-15 ஜனவரி'91 6/4 விலை ரூ.2

...ப படைகள்
...ப்பு
மாநில அதிகாரம்
பறிப்பு

## அரசியல் சீக்கு




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




1 - 15 டிச. '90 இதழில் தொலைத் தொடர்புத்துறை ஊழியர்கள் போராட்டம் பற்றிய கட்டுரையில் ''ஓவர்டைம் வேலைக்கான ஊதியத்தில் 1986 -லேயே கொடுத்திருக்க வேண்டிய உயர்வு தற்போது 1 - 2 - 90 லிருந்து தரப்பட்டுள்ளது'' என்பது தவறாக அச்சாகியுள்ளது. ஊதிய உயர்வு 1-12-90 முதல்தான் உயர்ந்துள்ளது.

மேலும், பம்பாய், டெல்லி ஊழியர்களின் கோரிக்கை போராட்டம், போராட்டமுறை எல்லாவற்றையும் குறிப்பிட்டு அது குறைக்கப்பட்ட முறையையும், இருட்டடிப்பு செய்யப்பட்டதையும் சுட்டிக்காட்டி துரோகத் தொழிற்சங்கத் தலைமை என்று விமர்சனம் செய்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். 'தொழிற்சங்கங்களின் மலட்டுத்தனம்' என்ற தலைப்பு தவிர்க்கப்பட்டு அதே கருத்து கட்டுரைக்குள் வரும்படி எழுதியிருக்க வேண்டும் என கருதுகிறேன்.

**விஷ்ணுவர்த்தன், அதிராம்பட்டினம்**

இதழ் எண் 6-2ன் (1 - 15 டிச. '90) மீதான எனது கருத்துக்கள்: புலிகளின் சீரழிவுக்கான புதிய ஆதாரங்கள் கட்டுரை சிறப்பானது. அவர்களது சீரழிவுக்கான செய்திகள் தொடர்ந்து கிடைத்தால் அடுத்து வெளியிடவும். அட்டைப் படத்தில் வந்துள்ள கருணாநிதியின் காவடி படம் அருமை. பக்கம் 17ல் வந்துள்ள படத்தினருகில் மூன்று பட்டைக் கோடுகள் இட்டு நிரப்பப் பட்டுள்ளது தேவையில்லை. அதற்குப் பதிலாக மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பெண் ஷே நாஸ் பற்றிய கூடுதல் விவரங்களையோ, மதவெறியின் கொடூரத்தைப் பற்றியோ எழுதியிருக்கலாம்.

**சங்கர், திருச்சி - 8.**

ராம ஜென்ம பூமி - பாபர் மசூதி பிரச்சனையில் எது சரியான தீர்வாக அமைய முடியும் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளும் பொருட்டு நான் எழுதிய கேள்விக்கு 16 -31 ஆக. '90 பு.ஜ. இதழில் தெளிவாக பதலளித்திருந்தீர்கள். பாபர் மசூதியை நினைவுச் சின்னமாக்குவது முஸ்லீம்களின் உடமையை - உரிமையை பறிப்பதாகிறது என்றும் இது இந்துவெறியர்களுக்கு சாதகமாகவே அமையும்; விட்டுக் கொடுப்பதும் சமரசம் செய்வதும் மிகவும் அபாயகரமானது என்றும் விளக்கியிருக்கிறீர்கள்.

இவற்றிற்கு பதில் கூறுவதாக நினைத்து ஓடுகாலிகளின் கேடயம் ஏடு (16 - 30, நவ. '90), நினைவுச் சின்னமாக்குவதே சரியானது என்று மீண்டும் குருட்டுத்தனமாக, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று பிடிவாதமாக எழுதியுள்ளது. எப்படி ஒரு குழந்தைக்கு இரு தாய்மார்கள் உரிமை கொண்டாட முடியாதோ அதுபோலத்தான் முஸ்லீம்களுக்குச் சொந்தமான பாபர் மசூதியை எவ்வித ஆதாரமின்றி இந்து வெறியர்கள் உரிமை கொண்டாட அருகதை அற்றவர்கள். இது படிக்காத பாமரனுக்குக் கூட தெரியும். ஏனோ ஓடுகாலிகளுக்கு இன்னும் விளங்கவில்லை.

**ஏ.வி.அண்ணாதுரை, ஆலந்தூர்.**

நவ. '90 இதழில் வெளியாகி இருந்த மலம் அள்ளும் தொழிலாளர்களின் அவலம் கட்டுரை என்னை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. இந்த தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களின் அவல நிலையையும், இவர்களுக்கு அரசும் அதிகாரிகளும் செய்யும் அடாவடித்தனமான செயல்களையும் துணிச்சலுடன் விளக்கியிருந்தது பாராட்டுக்குரியது. தங்கள் அறியாமையை போக்கி அவர்கள் ஒட்டு மொத்தமாக திரண்டு போராடத் துணிந்ததால்தான் வாழ்வில் மேன்மை காண முடியும் என்பதைப் படம் பிடித்துக் காட்டி விட்டீர்! போற்றக் கூடியதுமாகும்!

**சு.பாரதிராஜா, சென்னை - 13.**

இதழ் எண் 6 - 2ல் வந்த எரியும் தீயில் எண்ணை ஊற்றும் பாசிச பாதந்தாங்கிகள் கட்டுரை ஆணித்தரமாக திரைகிழித்துக் காட்டியது. ஆனால், கட்டுரையின் எழுத்துக்கள் மிகச் சிறியதாக இருந்தது. படிப்பதற்கு மிகவும் சிரமமாக இருந்தது.

**பி.தவமணி, மாயனூர்.**

இதழ் எண் 6 - 1ல் வந்திருந்த 'ஜெர்மன் பிளவு' கட்டுரை மிகவும் சிறப்பானது. பல மறைக்கப்பட்ட உண்மைகளை ஆதாரத்துடன் நிருபித்து கம்யூனிஸ்டுக்களுக்கு உரிய நேர்மையை நிலைநாட்டியுள்ளது. மேலும் கேள்வி - பதில் பகுதி. இந்து மதவெறி கட்டுரை, பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் கட்டுரை முதலான அனைத்துக் கட்டுரைகளும் தேவையான சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளது. நகரசுத்தி தொழிலாளர்கள் பற்றிய கட்டுரையில் கடைசி வரிகள் நினைவில் நிற்கும் வண்ணம் அமைந்துள்ளது.

**வி.ஜெகதீசன், திருச்சி.**

நான் 'மண்டல் கமிஷன்' பற்றிய வினா எழுப்பியதற்கு தகுந்த பதிலளித்ததற்கு மிக்க நன்றி. புதிய ஜனநாயகத்தின் ஒவ்வொரு பக்கத்தைப் படிக்கும் போதும் உண்மையில் என் உணர்வுகள் துடிக்கின்றன. ஒடுக்கப்பட்ட இனத்துக்காகவும், உழைக்கும் வர்க்கத்துக்காகவும் துணை நின்று அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தி புரட்சிக்கு மக்களை ஒன்று திரட்டும் தங்களது பணிக்கு என்னுடைய ஆதரவு என்றும் உண்டு.

**எஸ்.மீனாட்சி சுந்தரம், ஆவராணி.**

16 அக். - 15. நவ. '90 இதழில் வந்திருந்த பிழைப்புவாதிகளின் புழுதி அரசியல் போன்ற கட்டுரைகள் தவிர்க்கப் பட வேண்டும். இப்படிச் சீரழிந்து போனவர்களைப் பற்றி எழுதுவதைவிட ஒரு ஆக்கப்பூர்வமான அன்றாட அரசியல் விசயங்களை செய்திக் கட்டுரையாக வெளியிடுவது சிறப்பு. கேள்வி - பதில் பகுதியில் ஒரே கேள்விக்கு நீளமாகப் பதில் எழுதுவதை விட பல கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் சுருக்கமாக எழுதலாம்.

**பு.ஜ.வாசகர் வட்டம், சென்னை.**

1-15 டிச.'90 இதழின் அட்டைப்படம் விளங்கிக் கொள்ள கடினமாக இருந்தது. தொலை தொடர்பு ஊழியர் போராட்டம் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. வர்த்தக சூதாடிகளின் முகத்திரை கிழித்துக் காட்டியது பாராட்டத்தக்கது. 'தொடர்கிறது மதக்கலவரம் படர்கிறது இந்துவெறி பாசிசம்' கட்டுரையில் போலி கம்யூனிஸ்டுகள் இந்து மதவெறி கும்பலுக்கு எப்படி வால் பிடிக்கிறார்கள் என்பதை குறிப்பாக எழுதியிருந்தால் கட்டுரை இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

**— பு.ஜ. வாசகர் வட்டம், திருவில்லிபுத்தூர்.**

## மதவெறிக்கு எதிராக..

**திருவையாறு:**

விவசாயிகள் விடுதலை முன்னணியினர் டிசம்பர் 10, 11, 12 ஆகிய தேதிகளில் சுற்று வட்டாரப் பகுதிகளில் இந்துமதவெறிக்கு எதிராக சைக்கிள் பிரச்சாரம் மேற்கொண்டனர். இந்து முன்னணியினர் தீவிரமாக செயல்படும் திருப்பந்துருத்தி, கண்டியூர், நடுக்கடை, திருவையாறு முதலான பல பகுதிகளில் மதவெறியர்களை இனங்காட்டி விரிவாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 50 முதல் 100 பேர் வரை ஒவ்வொரு ஊரிலும் மக்கள் கூடி நின்று பிரச்சாரத்தைக் கேட்டனர்.

**ராமேஸ்வரம்:**

புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பாக ராமேஸ்வரத்தில் மதவெறியை எதிர்த்து சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ''மதவெறியைத் தூண்டி உழைக்கும் மக்களின் ரத்தம் குடிக்கும் ஆர்.எஸ்.எஸ். மதவெறிப் பாம்பை அடித்துக் கொல்லுவோம்'' என்று முழக்கங்கள் எழுதப்பட்டது. மறுநாள் இரவு ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் சுவரெழுத்தில் உள்ள ஆர்.எஸ்.எஸ். மத என்ற சொல்லை அழித்துவிட்டு அதில் ம.க.இ.க. என்று எழுதினர். பகுதித் தோழர்கள் மறுநாள் சென்று திரும்பவும் சரியாக எழுதிவிட்டு வந்தனர். ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் அதன்பின்னும் சுவரெழுத்து முழக்கத்தின்மேல் சாயத்தை ஊற்றி அழித்தனர். மேலும், ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், தாங்கள் எழுதிய சுவரெழுத்துக்களில் ம.க.இ.க. நாய்களா என்று எழுதியுள்ளனர். மதவெறியையும், ரௌடித்தனத்தையும் தவிர வேறொன்றும் தங்களிடம் இல்லை என நிருபித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

4

1-15 ஜனவரி'91

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# ஜெயலலிதா: தமிழ்நாட்டின் அரசியல் சீக்கு

இரகசிய வாழ்க்கையைத் தற்காலிகமாகத் துறந்துவிட்டு மீண்டும் தமிழ்நாட்டு அரசியலில் குதித்துக் கலக்கத் துவங்கியிருக்கிறார், ஜெயலலிதா. கருணாநிதி ஆட்சியைக் கலைத்து விட்டு, மறுபடி தேர்தல் வைத்து ஜெயலலிதா ஆட்சியைப் பிடித்து விடுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமடைந்திருப்பதுதான் இதற்குக் காரணம். பாண்டிச்சேரியில் தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதில் ராஜீவ் - சந்திரசேகர் - ஜெயலலிதா கூட்டு அடைந்துள்ள வெற்றி அவரை மேலும் குதூகலிக்கச் செய்துள்ளது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் தி.மு.க. ஆட்சியைக் கலைத்து, விரைவில் தேர்தல் நடத்தும்படி சந்திரசேகர் அரசை நிர்ப்பந்திப்பதையும் தீவிரமாக்கியுள்ளார். ராஜீவோடு சேர்ந்து சந்திரசேகர் ஆட்சியை ஆதரிப்பதற்குச் ஜெயலலிதா போட்டுள்ள நிபந்தனைகளில் இதுவும் ஒன்று - முக்கியமானது - என்பது நாடறிந்தது தான்! அதுமட்டுமல்ல சந்திரசேகர் ஆட்சி நீடிப்பதற்கும் ஜெயலலிதா தயவு மிகமிக அவசியம் தான்!

எதிர்க்கட்சியின் ஆட்சியைக் கவிழ்ப்பது அல்லது கலைப்பதும், அரசியல் கூட்டுகள் - பேரங்கள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதும் நமது நாட்டில் புதியதல்ல. அதற்காக அடாவடித்தனமான, அக்கிரமமான, அராஜகமான பல வழிகளை இந்திய அரசியல்வாதிகள் மேற்கொள்வதும் புதியதல்ல. ஆனால் அதைச் சாதிப்பதற்காக ஜெயலலிதா ஒரு கடைகோடி நிலைக்கே போவதோடு, பல புதிய வழிமுறைகளையும் உருவாக்குகிறார். கருணாநிதி பதவியேற்ற மறுநாளில் இருந்தே ஆட்சியைக் கலைத்துவிட வேண்டுமென்று கோரத் தொடங்கினார். அதற்காக ஜெயலலிதா கூறிவரும் காரணங்களைத் தொகுத்துப் பாருங்கள். சட்டமன்றத்தில் கருணாநிதி கட்சியினரோடு சேர்ந்து ஆபாசக் கூத்துகள் - ரெளடித்தனங்களை அரங்கேற்றினார்; அதைத் தொடர்ந்து தன்னை மானபங்கப்படுத்தவும் கொல்லவும் முயன்றதாகவும் குற்றஞ்சாட்டினார். பாண்டிச்சேரி தேர்தல் பிரச்சாரத்தினூடே பிறந்தநாள் கொண்டாட சென்னைக்கு நள்ளிரவு திரும்பியபோது நேர்ந்த கார் - லாரி விபத்தில் காயமடைந்தார்; அதுவும் தன்னைக் கொல்ல நடந்த சதியென்றார். பிறகு மருத்துவமனையில் அடையாளம் தெரியாத நபர் மூலம் பிரசாதத்தில் நஞ்சு கலந்து தன்னைக் கொல்வதற்கு சதி நடப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

தன்னை இரகசியப் போலீசார் தொடருவதாகவும், தமிழ்நாட்டில் தனக்குப் பாதுகாப்பில்லையென்றும், தனது மருத்துவர்களுக்கும் மிரட்டல்கள் வருவதாகவும் புகார் கூறினார். தனது கட்சிக்குள்ளும், தனது குடும்ப நண்பர்களுடனும் ஏற்படும் உள் தகராறுகள் கூட எதிரிகளின் தூண்டுதல்கள் - சதிகள் என்றார். கட்சியில் தனது நிதி மோசடிகள் மீதான நடவடிக்கைகள் கூட அரசியல் பழிவாங்குதல் எனச் சொன்னார். ஜெயலலிதாவின் பலவீனங்களைக் கூட கருணாநிதி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது, அம்பலப்பட்டுப் போனது, அவருக்குச் சாதகமாக அமைந்தது. இப்போது தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளால் சட்டம் - ஒழுங்கு குலைந்துவிட்டதெனக் காரணம் காட்டி கருணாநிதி ஆட்சியைக் கலைக்கச் சொல்லுகிறார்கள், ஜெயலலிதாவின் முந்தானை ஏந்திகளான வாழப்பாடி - தா.பாண்டியன் கும்பல். ஆனால் ஜெயலலிதாவின் கூப்பாடு இன்னமும் தன்னைச் சுற்றியதாகவே இருக்கிறது.

கருணாநிதியின் ஆட்சியைக் கலைப்பதற்காக ஏதாவது ஒரு முகாந்திரத்தை ஏற்படுத்தும்படி ராஜீவ் கூறிய யோசனையை ஏற்று சென்னை திரும்பினார், ஜெயலலிதா. எம்.ஜி.ஆர். நினைவு நாளில் அவர் சமாதிக்குப் போனபோது, தனது ரசிகரான இலங்கைக்காரரையே பிடித்து, உதைத்து தன்னைக் கொல்ல முயன்றதாகவும், கருணாநிதி அவரைத் தப்புவிக்க முயலுவதாகவும் பெரும் கலவரத்தை நடத்தினார். அரசுத் தலைவர் வெங்கடராமன், பிரதமர் சந்திரசேகருக்கு வரவேற்புத் தருவதற்குப் போய்த் தகராறுகள் நடத்தினார். ஆளுநரையும், அரசுத் தலைவரையும், பிரதமரையும் மாறிமாறிப் பார்த்து ஆட்சிக்கலைப்பு மனுக் கொடுத்தார். ஜெயலலிதாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பின்பலமாகவும், தூபம் போடுபவர்களாகவும் வாழப்பாடி, தா.பாண்டியனும் அவர்களது கட்சித் தலைமையும் மட்டுமல்ல 'சோ', சுப்பிரமணிய சுவாமி, அரசு உயர் வக்கீல் ஜி.ராமசாமி, சங்கராச்சாரி போன்ற பார்ப்பன கும்பலும் இருக்கிறது. விஜய் மல்லையா, சாராய உடையார் போன்ற தரகு அதிகார முதலாளிகளும் இருக்கின்றனர்.

இவர்களெல்லாம் கருணாநிதி ஆட்சியிலும் தமது நோக்கங்களை சாதித்துக் கொள்ள முடியும். இருந்தாலும் ஜெயலலிதா பதவிக்கு வருவதானது தமது சொந்த ஆட்சி அமைவதைப் போன்றதென்றே இவர்கள் கருதுகின்றனர். ஏனெனில் ஜெயலலிதாவின் கட்சி அமைப்பும், கொள்கைகளும் அவர்களுக்கு மிகவும் பொருத்தமாகவும் வசதியாகவும் இருக்கிறது. எம்.ஜி. ஆர். நினைவு நாளில் வீதிவீதியாக அவரது படத்திற்கு மாலை போட்டு, பூசை - திவசம் நடத்திய எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா தொண்டர்கள்; எம்.ஜி.ஆர். சமாதிக்குப் போய் மாரில் அடித்துக் கொண்டு கதறியழுத பெண்கள்; விடிய விடிய 'வீடியோ' சினிமாப் பார்த்த ரசிகர்கள் - இப்படி 'அசைக்க முடியாத' உதிரித் தொழிலாளர்கள் - கிராமப்புறப் பாமர மக்களின் ஆதரவு எல்லா மாவட்டங்களிலும் பிழைப்புவாத - சுயநல அணிகள் - தலைமை. கேள்விக்கே இடமற்ற தனிநபர் கவர்ச்சியும் - சர்வாதிகாரமும். மண்டல் கமிசன் - இடஒதுக்கீடு, அயோத்தி விவகாரம், மத்திய - மாநில உறவு, பஞ்சாப் - காஷ்மீர் - அசாம் பிரச்சினைகள் ஆகிய அனைத்திலும் மிக மிக மோசமான பிற்போக்கு நிலைப்பாடுள்ள தலைமை. அதேசமயம் இவை எதுபற்றியும் "அக்கறைப்படாத ஒரு நிரந்தரமான ஓட்டு வாங்கியுள்ள கட்சி. விலைவாசி ஏற்றம், மலிவு விலை மது போன்ற மக்களைப் பாதிக்கும் எந்தவொரு சமூக பொருளாதார, அரசியல் பிரச்சினையின் மீதும் போராடும்படி அறைகூவல் விடாத கட்சி. இதற்கு மாற்றுக் கட்சியாக உள்ள தி.மு.க. லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

இப்படிப்பட்ட ஜெயலலிதா கட்சி - ஆட்சியின் கீழ் அதிகார வர்க்கம், போலீசை வைத்து தாம் எதையும் சாதிக்க முடியும் என்று அந்த பாசிச - பார்ப்பன கும்பல் எண்ணுகிறது. ஆனால் உண்மையில் ஜெயலலிதா தமிழக அரசியலைப் பிடித்துள்ள கொடிய சீக்கு - நோய் என்பதையே இவையெல்லாம் காட்டுகின்றன. அடிப்படை மக்களைப் போர்க்குணமிக்க அரசியல், பொருளாதார, சமூகப் போராட்டங்களுக்கு அணி திரட்டுவதன் மூலமே இந்த அரசியல் கழிசடை சக்தியை முறியடிக்க முடியும். 5

படிப்பகம்

www.padippakam.com



# மத்தியப் படைகள் குவிப்பு
# மாநில அதிகாரம் பறிப்பு

பதவியைப் பாதுகாத்துக் கொள்ள பிழைப்புவாத தி.மு.க. அரசு எதையும் செய்யத் தயங்காது என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டிவிட்டது. பதவிப் பிச்சைக்காக அது மாநில அரசின் உரிமைகளையும் அடகு வைக்கத் துணிந்து விட்டது. மத்தியில் வி.பி.சிங் அரசு கவிழ்ந்ததும், ''தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு மோசமாகிவிட்டது; புலிகளின் நடவடிக்கைக்கு தமிழகம் தளமாக மாறிவிட்டது; ஆயுதக் கலாச்சாரம் பரவிவருகிறது. பெட்ரோல், டீசல், மற்றும் மருந்துப் பொருட்களை புலிகள் கடத்திச் செல்கின்றனர். கருணாநிதி அரசு இதற்கு உடந்தையாகச் செயல்படுகிறது'' என்ற குற்றச் சாட்டுக்களுடன் வாழப்பாடி, ஜெயலலிதா, தா.பாண்டியன் போன்றதுகள் ஆட்சியைக் கலைக்கக்கோரி கூப்பாடு போட்டன. காங்கிரசு, அ.தி.மு.க. தயவில் ஆட்சி நடத்தும் சந்திரசேகர் கும்பலும் இதை எதிரொலிக்கும் வண்ணம், உரிய நடவடிக்கை எடுக்கப்போவதாக மிரட்டியது. ஆட்சிக் கலைப்பு பீதியில் உறைந்து போன கருணாநிதி, மத்திய அரசுடன் ஒத்துழைப்பதாக நாஞ்சில் மனோகரன் மூலம் தூதுவிட்டு சந்திரசேகரிடம் கெஞ்சினார்.

எதிர்க்கட்சி ஆளும் எந்த மாநிலத்துக்கும் தொல்லை தரமாட்டோம் என்று உறுதியளித்த சந்திரசேகர் கும்பல், தி.மு.க. அரசைக் கலைக்காமலேயே, அறிவிக்கப்படாத குடியரசுத் தலைவர் ஆட்சியை தமிழகத்தில் இப்போது பிரகடனம் செய்துள்ளது. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கைக் காப்பது, கடலோரப் பகுதிகளில் ஈழப் போராளிகளின் நடவடிக்கையைத் தடுப்பது என்ற முகாந்திரத்தின் பேரில் எல்லைப் பாதுகாப்புப் படையை (BSF) குவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, தமிழகத்தின் கடற்கரைப் பகுதியில் இந்திய கப்பற்படையும், கடலோரக் காவற்படையும் கண்காணிப்புப் பணிகளைச் செய்து வரும் அதே நேரத்தில், எல்லைப் பாதுகாப்புப்படை அல்லது மத்திய ரிசர்வ் போலீசுப்படை கடலோர மாவட்டங்களில் நிறுத்தப்படும். ''முதற்கட்டமாக 4 கம்பெனிகள் அளவுக்கு இப்படை அனுப்பப்படும். பின்னர் நிலமையை ஒட்டி கூடுதலாக அனுப்பி வைக்கப்படும், படைகளைக் குவிப்பதற்கு எல்லை ஏதுமில்லை'' என்று கூறியுள்ளார், மத்திய உள்துறை மந்திரி சகாய்.

## ராணுவ அட்டூழியங்களுக்கு சட்ட பூர்வ அங்கீகாரம்

அதாவது தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் துணை ராணுவம் எந்த நேரத்திலும் ஊரடங்கு உத்திரவு போடலாம். துணைராணுவ நடவடிக்கையைக் காரணம் காட்டி உள்ளூர்மக்களை எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றலாம். 'தீவிரவாதி'களின் நடவடிக்கையை ஒழிப்பது என்ற பெயரில், அவர்களுக்கு உதவியவர்கள் என்று கூறி அப்பாவி கிராம மக்கள் மீது அடக்குமுறையை ஏவலாம்; அவர்களது அற்ப உடமைகளைச் சூறையாடலாம்; பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவலாம். யாரும் ஏனென்று கேள்வி கேட்க முடியாது. கருணாநிதி அரசும் இதில் தலையிட முடியாது. அதிகபட்சம் போனால் மத்திய அரசுக்கு புகார் மட்டும்தான் கொடுக்க முடியும். ஆனால் மத்திய அரசு அதன்மீது நடவ்டிக்கை எடுக்க வேண்டிய் அவசியமில்லை.

இதர மாநிலங்களில் சட்டம் ஒழுங்கைக் காக்க நிறுத்தப்பட்டுள்ள துணை ராணுவப்படைகளின் அட்டூழியங்களைப் பட்டியலிட்டு மாளாது. நாகாலாந்து, மிஜோரம், மணிப்பூர் மாநிலங்களில் ராணுவம் நடத்தி வரும் அட்டூழியங்களை எதிர்த்து அம்மாநில முதல்வர்களே மத்திய அரசுக்குக் கடிதங்கள் எழுதியும்கூட இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காஷ்மீர் பஞ்சாபில் பாக். எல்லையை ஒட்டிய பகுதியில் கடந்த ஜூலைமாதம் முதலாக இரவு நேரங்களில் ஊரடங்கும், சாலைப் போக்குவரத்து நிறுத்தமும் அறிவிக்கப்பட்டு ராணுவ படையின் கலவரப்பகுதியாக மாற்



படிப்பகம்

www.padippakam.com

றப் பட்டுவிட்டது. இதனால் விவசாயிகள் அறுவடை செய்யவோ, தானியத்தை சந்தைக்கு எடுத்துச் செல்லவோ முடியாமல் அல்லற்படுகின்றனர்.

இப்போது தீவிரமாகிவிட்ட மதக் கலவரங்களைக் கட்டுப்படுத்த நாடெங்கும் பல்வேறு பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. கலவரத்தைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் அது நடத்திய அட்டூழியங்கள் ஏராளம். குறிப்பாக அலிகரில் உத்திரப் பிரதேச ஆயுதப்படை (PAC) சிறுபான்மை முஸ்லிம் மக்களைத் தாக்கி இந்து மதவெறியர்களுடன் சேர்ந்து நரவேட்டையாடியது. இதற்கெதிராக எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்திய போதிலும் கூட, மாநில அரசால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

புயல், வெள்ளம் அல்லது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கலவரங்கள், கிளர்ச்சிகள் பெருகினால் மட்டுமே துணை ராணுவத்தைக் குவிப்பது என்பது போய், கலவரங்கள் இல்லாத போதிலும் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களை தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து முடக்குவதற்காக, துணைராணுவத்தை நிறுத்துவதை பாசிச இந்திரா தொடங்கி வைத்தார். வடகிழக்கு இந்தியாவில் பிராந்திய எதிர்க்கட்சிகள் பலமான சக்தியாக வளர்ந்து தேர்தலில் பெரும்பான்மையாக வெற்றி பெற்றதும் இன உரிமைக்காகப் போராடும் தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் துணைராணுவத்தைக் குவித்து, ஆட்சியைக் கலைக்காமலேயே அம்மாநிலங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டார். அதே உத்தியோடு தான் இப்போது தமிழகத்திற்கு துணைராணுவம் அனுப்பப்படுகிறது.

| படையின் பெயர் | நிறுவப்பட்ட ஆண்டு | மொத்த பலம் | படை குவிக்கப்பட்டுள்ள மாநிலங்கள். |
|---|---|---|---|
| அசாம் துப்பாக்கிப் படை (Assam Rifles) | 1835 | 50,000 | ஜம்மு - காஷ்மீர், அசாம், மணிப்பூர், நாகாலாந்து, மிஜோரம், மேகாலயா, திரிபுரா, சிக்கிம், அருணாசலப் பிரதேசம். |
| மத்திய ரிசர்வ் போலீஸ் படை (CRPF) | 1939 | 1.25 லட்சம் | பஞ்சாப், ஜம்மு - காஷ்மீர், உ.பி. பீகார், டெல்லி, ஆந்திரா, சண்டிகார், கர்நாடகா, அருணாசலப் பிரதேசம். |
| இந்தோ-திபெத் எல்லை போலீஸ் படை (ITBP) | 1962 | 30,000 | உ.பி. இமாசல பிரதேசம், பீகார், ராஜஸ்தான், ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப். |
| எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) | 1965 | 1,70 லட்சம் | உ.பி. பீகார், பஞ்சாப், ஜம்மு - காஷ்மீர், தமிழ்நாடு. |
| மத்திய தொழிற் பாதுகாப்புப் படை (CISF) | 1969 | 73,000 | உ.பி., பஞ்சாப். |
| தேசிய பாதுகாப்புப் படை (NSG) | 1984 | 7,000 | ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப். |

## உரிமையைப் பறிக்கும் பாசிச நடவடிக்கை

இன்னும் சொல்லப் போனால், சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது என்பது மாநில அரசின் கீழ் வரும் உரிமை. ஆனால், தாங்களே ஏற்றுக் கொண்ட உரிமையை - நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி அரசுகள் அனுபவிக்கும் உரிமையைப் பறிக்கும் அடாவடித்தனத்தைதான் பாசிச ராஜீவ் - சந்திரசேகர் கும்பல் செய்துள்ளது. ஏதோ ஒரு முகாந்திரத்தைக் காட்டி மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கை தாமே கையிலெடுத்துக் கொள்வது, நிரந்தரமாக துணை ராணுவத்தை, ராணுவத்தை நிறுத்தி வைப்பது, மாநில அரசைக் கலைக்காமலேயே தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது எனும் மத்திய அரசின் பாசிச நடவடிக்கையே இது.

அதைவிட, மொழி புரியாத ஒரு படையை தமிழகத்தில் கொண்டு வந்து நிறுத்துவதென்பது, ஏறத்தாழ ஒரு ஆக்கிரமிப்புக்கு ஒப்பானது. ஆக்கிரமிப்புப்படைகள் எவ்வாறு நடந்து கொள்ளுமோ அவ்வாறுதான் துணைராணுவப் படைகள் நடந்து கொள்கின்றன என்பதை எல்லா மாநிலங்களின் அனுபவங்களும் தெளிவாகவே உணர்த்துகின்றன.

மாநில சுயாட்சி பற்றி வாய்கிழியப் பேசும் கருணாநிதி அரசு, இதை எதிர்க்க முதுகெலும்பின்றி 'மத்திய அரசுடன் எப்போதும் இணக்கமாகச் செயல்படுவோம்'' என்று அதன் காலை நக்குகிறது. பதவியைப் பாதுகாத்துக் கொள்ள ஈழப்போராளிகள், ஆதரவாளர்கள் மற்றும் கம்யூனிசப் புரட்சியாளர்களைக்கைது செய்து சிறையிலடைத்து உள்ளது. ஈழப் போராளிகள் மீண்டும் தமிழகத்தில் நுழைவதைத் தடுக்க உளவுப் படைகளை ஏவி கண்காணிப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாக்கியுள்ளது.

## துணை ராணுவப் படைகளா? சட்டம் - ஒழுங்கைக் காக்கும் படைகளா?

தமிழகம் உள்ளிட்டு நாட்டின் பல பகுதிகளில் ராணுவமும் துணை ராணுவப் படைகளும் ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ளன. பாசிச இந்திரா காலத்தில் வெவ்வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட இப்படைகள் இன்று நாட்டின் சட்டம் - ஒழுங்கைக் காக்கும் பணிக்கு திருப்பப்பட்டுள்ளது. சேமிப்புப் படைகளே இல்லை என்ற அளவுக்கு எல்லா படைகளுமே நாடு முழுவதும் பரவலாக நிறுத்தப்பட்டு, பெயரளவிலான நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியே கூட இன்று கேலிக் கூத்தாகிவிட்டது.

வடகிழக்கு எல்லைப் பகுதியைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டது அசாம் துப்பாக்கிப்படை (Assam Rifles). துணை ராணுவப்படைகளிலேயே தொன்மை வாய்ந்த இப்படை 31 பட்டாலியன்களைக் கொண்டது. அன்னிய ஊடுருவலைத் தடுக்கும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட இப்படை இன்று ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் சட்டம் - ஒழுங்கைக் காக்க சிவில் நிர்வாகத்துக்கு உதவியாக நிறுத்தப்பட்டுள்ளது.

கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கலவரங்களோ, போராட்டங்களோ தீவிரமானால், தவிர்க்க இயலாத நிலையில் சிவில் நிர்வாகத்துக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது தான் மத்திய ரிசர்வ் போலீஸ் படை (CRPF). ஆனால், சிறிய பிரச்சினைகள் வந்தால்கூட இப்படையை அழைப்பதென்பது எல்லா மாநிலங்களிலும் வாடிக்கையாகி விட்டது. தெற்கே கர்நாடகாவிலிருந்து வடக்கே காஷ்மீர் வரை இன்று ஏறத்தாழ எல்லா மாநிலங்களிலும் இப்படை நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பஞ்சாப் மற்றும் காஷ்மீரில் இப்படையின் 281 கம்பெனிகள் குவிக்கப்பட்டுள்ளன.

இந்திய - சீன எல்லைத் தாவாவைத் தொடர்ந்து இமயமலை எல்லைப் பகுதியைப் பாதுகாக்க 1962ல் இந்தோ - திபெத் எல்லைப் போலீசு படை (ITBP) உருவாக்கப்பட்டது.18,000 அடி உயரத்தில் 1200 கி.மீ. நீள எல்லைப் பகுதியைப் பாதுகாப்பது அதன் பணியாகத் தீர்மானிக்கப்பட்டது. 1987க்குப்பிறகு இப்படையின் 10 கம்பெனிகள் பஞ்சாபில் வங்கிகளைப் பாதுகாக்கும்



படிப்பகம்

www.padippakam.com

பணிக்கு நிறுத்தப்பட்டன. பஞ்சாப் தவிர காஷ்மீர், உ.பி. ராஜஸ்தான் மாநிலங்களில் சட்டம் - ஒழுங்கைக் காக்க இன்று இப்படை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் போருக்குப் பின்னர் மேற்குப் பகுதி எல்லையைப் பாதுகாக்க 1965ல் எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) உருவாக்கப்பட்டது. இன்று 'தீவிரவாத, பிரிவினைவாதச் சக்திகளுக்கு எதிராகப் போராட பஞ்சாப் மற்றும் காஷ்மீரில் இப்படையின் பெரும் பகுதி குவிக்கப்பட்டுள்ளது.

அரசுத்துறை ஆலைகளைக் காக்கவும், அதில் எழும் தொழிலாளர்கள் போராட்டங்களை ஒடுக்கவும் 21 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய தொழிற் பாதுகாப்புப்படை (CISF) உருவாக்கப்பட்டது. ஆலைப் பாதுகாப்பு தவிர வேறெந்த சிறப்புப் பயிற்சியும் பெற்றிராத இப்படை இன்று பஞ்சாப் மற்றும் உ.பி. மாநிலங்களில் சட்டம் ஒழுங்கைக் காக்க குவிக்கப்பட்டுள்ளது.

படர்ந்து வரும் தீவிரவாதத்தை முறியடிக்கவும், நாட்டின் முக்கிய அரசியல் பிரமுகர்களைப் பயங்கரவாதத் தாக்குதலிலிருந்து காக்கவும் சிறப்பு அதிரடிப் படையாக தேசிய காவலர் படை (NSG) 1985ல் உருவாக்கப்பட்டது.ராணுவம் மற்றும் இதர துணை ராணுவப் படைகளிலிருந்து பொறுக்கியெடுத்த நபர்களைக் கொண்டு ''கமாண்டோ'' பயிற்சி பெற்றபடை இது. இதன் எண்ணிக்கை சிறியதானாலும் ஆற்றல் மிக்க படையாக கட்டி வளர்க்கப்பட்டது. பாசிச ராஜீவுக்கு பாதுகாப்பு அளித்து வந்த இக்கருப்புப் பூனைப்படை இன்று பஞ்சாப், காஷ்மீரில் சிவில் நிர்வாகத்துக்கு உதவுவதற்காக நிறுத்தப்பட்டுள்ளது.

## அடக்குமுறை எந்திரம் விரிவடைகிறது

### பாசிச அபாயம் படர்கிறது

இவை தவிர ரயில்வே பாதுகாப்புப் படை, மாநிலங்களின் ஆயுதப்படை முதலான இதர துணை ராணுவப் படைகளும் உள்ளன. நாடு முழுவதும் கிளர்ச்சிகள், நெருக்கடிகள் அதிகரிப்பதால் ஏற்கனவே ஆண்டுக்கு 1000 கோடி ரூபாயைத் தின்று ஏப்பம் விடும் ஏறத்தாழ 3 லட்சம் பேர் கொண்ட மேற்கண்ட துணை ராணுவப் படைகள் போதவில்லை என்று மேலும் நாலரை லட்சத்துக்கு உயர்த்த ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். ஏற்கனவே இருந்த அளவை விட கடந்த ஆறு ஆண்டுகளில் இப்படைகள் 40% அதிகரித்துள்ளன. 1991ல் இப்படைகளின் எண்ணிக்கை நாலரை லட்சத்துக்கு உயர்ந்து, அவற்றுக்கான செலவு 1922 கோடி ரூபாயாகிவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவும் போதாதென்று, படர்ந்து வரும் வகுப்புவாதக் கலவரங்களைக் கட்டுப்படுத்த, ''கலவர ஒழிப்பு சிறப்புபோலீஸ் படை'' ஒன்றைக் கட்டியமைக்கலாம் என்று உள்துறை மந்திரி சகாய் ஆலோசனை தெரிவித்துள்ளார். சிறுபான்மை மதத்தினர் மற்றும் நலிவடைந்த சமூகப் பிரிவினரைக் கொண்டு இப்படை கட்டியமைக்கப்படுவதை புரட்சி பேசும் போலிக் கம்யூனிஸ்டுகளும் வரவேற்றுள்ளனர்.

அடக்குமுறை அரசு எந்திரத்தை மேலும் மேலும் விரிவு படுத்திக்கொண்டே போவது என்பதை விதிவிலக்கின்றி எல்லா ஓட்டுக் கட்சிகளுமே அங்கீகரிக்கின்றன. நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் மூலம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதபோது அதிகாரவர்க்க - ராணுவ அரசு எந்திரத்தைக்கொண்டு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது என்பதே ஓட்டுக்கட்சிகளிடையே நிலவும் எழுதப்படாத ஒப்பந்தம். இத்தகைய பாசிசத் தாக்குதலைக் கூட ஜனநாயகம் என்பதாக அவர்கள் மாய்மாலம் செய்யத் தவறுவதில்லை.

ஒரு சிறுபான்மை அரசு - எந்த மாநிலத்திலும் தமது கட்சிக்கான வேரோ விழுதோ இல்லாத பிழைப்புவாத சந்திரசேகர் ஆட்சி - பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்ட அரசு எந்திரத்தைக் கொண்டு எதையும் செய்ய முடியும் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. நாளை இத்தகைய சிறுபான்மை ஆட்சிகூட இல்லாமல் அம்மணமாக பாசிசம் அரங்கேறுவதற்கான முன்னறிவிப்புதான் இது.

பதவிக்காக அலையும் பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகள் இதற்கெதிராக மக்களைத் திரட்டிப் போராட அருகதையற்றவை. அத்தகைய போராட்டத்திற்குக்கூட இன்று இக்கட்சிகள் தயாரில்லை.

எனவே, தமிழகத்தின் உரிமையைப் பறிக்கும் மத்திய அரசின் அடாவடித்தனத்திற்கு எதிராகவும், படர்ந்து வரும் பாசிச அபாயத்திற்கு எதிராகவும் புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டு போராட வீறுகொண்டு கிளர்ந்தெழுவோம்!

● மனோகரன்.

## ஊழலின் உறைவிடமாகக்கூட்டுறவுவங்கிகள்

ஊழல்கள், மோசடிகள், பித்தலாட்டங்கள்... என எத்தனை வார்த்தைகள் போட்டாலும் அவை இன்றைய கூட்டுறவு வங்கிகளுக்கு போதாது போலும்! ஒன்றல்ல, இரண்டல்ல புற்றீசல்களாய் கூட்டுறவு வங்கி ஊழல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதற்கு இன்னுமொரு உதாரணமாக பூதலூர் T - 1451 வேளாண்மை கூட்டுறவு வங்கியின் ஊழல்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன.




533, 534 ஆகிய எண் உள்ள உறுப்பினர்கள் பெயரில் வண்டி மாட்டுக் கடன் போட்டு அதிகாரிகளே எடுத்துக் கொண்டனர். கடனை அதிகாரிகளே தள்ளுபடி செய்துவிட்டு வட்டி மட்டும் ரூ.250 கட்ட வேண்டும் என்று மேற்குறிப்பிட்ட உறுப்பினர்களிடம் கேட்கவே இந்த விஷயம் வெளிவந்தது. இதே போல் 535 எண் கொண்ட உறுப்பினர் பெயரிலும் நடந்துள்ளது. இவரை அதிகாரிகள் சரிகட்டிவிடவே தன்மீது போடப்பட்ட கடன் பற்றிய விவரங்களை வெளியிட மறுக்கிறார்.

1429 - எண் உள்ள உறுப்பினருக்கு அவரது 9 ஏக்கர் நிலத்திற்குரிய கடனை கொடுக்க அதிகாரிகள் மறுக்கின்றனர். ஏனெனில் அந்நிலத்தின் பேரில் முறைகேடாக இன்னொருவருக்குக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

கடன் கொடுக்கும் பொழுது நுண்ணூட்டத்திற்கு என்று ஒரு தொகையை பிடித்துக் கொண்டு உரம் தருவதாக கூறுகின்றனர். ஆனால், உரம் வழங்குவதில்லை அல்லது அறுவடை செய்துவிட்ட பிறகு உரம் தேவையில்லாத காலத்தில் வழங்குகின்றனர். மேலும் வசூலிக்கும் பணத்தை தமது சொந்த செலவுக்கு வைத்துக் கொள்கின்றனர். அல்லது வங்கியில் போட்டு வட்டியை சாப்பிடுகின்றனர். பின்னர் வெகுநாட்கள் கழித்து உறுப்பினர் கணக்கில் வரவு வைக்கின்றனர். இதில் என்ன பரிதாபம் என்றால் அத்தொகை அதிகாரிக்கு குட்டிபோட்டுக் கொடுத்த வட்டித் தொகையைக் கூட உறுப்பினர் கடனில் அடைப்பதில்லை.

வங்கி அதிகாரிகள், கடனுக்கு உரிய ரசீதில் கையொப்பம் வாங்குவதற்குப் பதிலாக வெள்ளைத் தாளில் கையொப்பம் வாங்குகின்றனர்.

நகைக்கடன் வழங்கும்போது சாதி பார்த்து, லஞ்சம் பார்த்துத்தான் வழங்குகின்றனர். இதனால் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள்.

வாயைக் கட்டி சிறுவானி சேத்து காலந் தள்ளுற சாதி சனங்க - விவசாயிகள். இவர்கள் வயிற்றிலடிக்கும் வங்கி அதிகாரிகளை கண்டித்து பூதலூரைச் சேர்ந்த சர்வ கட்சியினர் ஊர்வலம் நடத்தினர். 4.12.90 அன்று நடந்த ஊர்வலத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் கலந்து கொண்டனர். பி.பிச்சைராஜ் (தமிழக இளைஞர் முன்னணி, தஞ்சை) ஊர்வலத்திற்கு தலைமை தாங்க, தோழர் ஜெயசீலன் (வி.வி.மு.திருவையாறு) தொடங்கி வைத்தார். உழவர் உழைப்பாளர் கட்சி, தமிழ் தேசிய இயக்கம், மக்கள் நல மன்றம் பூதலூர், எம்.சி.பி.ஐ., ஐ.என்.ஆர்.எல்.எப். முதலிய அமைப்பினரும் ஊர்வலத்தில் பங்கெடுத்தனர். ஆனால், தி.மு.க., சி.பி.எம் கட்சியினர் வங்கித் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் இருப்பதால் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை.

தகவல்: வி.வி.மு, திருவையாறு.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளாதாரத் தாக்குதலின் துவக்கம்

'ஒரு மனிதனைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டுமானால் அவனுக்கு அதிகாரத்தைக் கொடுத்துப் பார்' என்பது மேலைநாட்டுப் பழமொழி. அதிகாரத்துக்கு வந்த ஒரே மாதத்திற்குள் தனது சுயரூபத்தைக் காட்டிய பிரதமராக சந்திரசேகரைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதல் வேலையாக விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தப் போவதாக வாக்களித்து விட்டு ஒரு மண்ணும் செய்யவில்லை. சந்திரசேகர் கும்பல். இதுவும் போதாதென்று பட்ஜெட்டுக்கு 10 வாரங்களுக்கு முன்னதாக ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய்க்கு புதிய வரிச்சுமைகளை மக்கள் மீது திணித்துள்ளது. இதன்படி உயர்ரக சோடா மீதான வரி 26 பைசாவிலிருந்து 50 பைசாவாக உயர்த்தப்படும். அதேபோல குளிர் பானங்கள் மீதான வரி 50% உயரும். இதுதவிர இறக்குமதியாகும் செயற்கை இழை, விஸ்கோஸ், பாலியெஸ்டர், நைலான் இழைகள் மீது 30% எக்சைஸ் வரி உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் கம்பள விரிப்புக்கான கச்சாப் பொருட்கள் மீதான வரி 5 முதல் 10% வரையிலும், ரயான் மற்றும் இதர மரக் கூழ்களின் மீதான வரி 10 முதல் 20% வரையிலும் கூடுதலாக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 17 அன்று இந்த அறிவிப்பை வெளியிட்ட அடுத்த நாளே மீண்டும் இன்னொரு சுற்று விலையேற்றம், வரி விதிப்புகளை சந்திரசேகர் கும்பல் அறிவித்தது. இதன்படி தனி நபர் மற்றும் தொழில் நிறுவனங்களின் வருமான வரி உயர்த்தப்பட்டுள்ளது. புகையிலை (சிகரெட்) மற்றும் சிமெண்ட் மீது கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்டவும், செலவினங்களை முறைப்படுத்தவுமே இந்த நடவடிக்கை என்கிறார் நிதி மந்திரி. சாமானிய மக்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்படாது; இது பணக்காரர்கள் - முதலாளிகள் மீது போடப்படும் வரி என்பதாக அரசும் இதன் எடுபிடி பத்திரிக்கைகளும் மாய்மாலம் செய்கின்றன. உண்மையில் இப்போதைய வரிவிதிப்பில் நேர்முக வரி சிறு அளவுதான். சுங்கவரி, எக்சைஸ் வரி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் முதலான மறைமுக வரி விதிப்புகளே அதிகமாக உள்ளன. இவை நேரடியாக பாமர மக்களையே தாக்கும்.

உண்மையில் இப்போதைய வரிவிதிப்பு கூட, சந்திரசேகர் ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் மோசடித் தரகுப் பெருமுதலாளி அம்பானியின் உத்திரவுப்படிதான் நடந்துள்ளது. அம்பானியின் தொழில்துறை எதிரியும், எதிர்த்தரப்பு தரகு முதலாளியுமான நுஸ்லி வாடியாவின் செயற்கை இழை துணி உற்பத்திக்குத் தேவையான பாராக்சிலின் மீது வி.பி.சிங் அரசு சுங்கத் தீர்வை விதிக்காமல் வாடியாவுக்கு சலுகை காட்டியது. இதனால் இப்பொருளுக்கு மாற்று ரசாயனப் பொருளை தயாரிக்கும் அம்பானியின் லாபம் குறைந்தது. தான் உற்பத்தி செய்யும் பொருளுக்கு சந்தை லாபம் ஈட்ட சந்திரசேகர் மூலம் சுங்க வரி விதிப்பைத் திணித்து இப்போது தனது தொழில் முறை எதிரியான வாடியாவை முடக்கியுள்ளார் அம்பானி.

அம்பானி மட்டுமல்ல; தரகுப் பெருமுதலாளிகள் தமது விருப்பப்படி உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்திக் கொண்டு கொள்ளை லாபம் ஈட்டவும் சந்திரசேகர் கும்பல் பச்சைக் கொடி காட்டியுள்ளது. ஏற்கனவே விலையேற்றம் செய்து கொண்டு கொள்ளை லாபம் ஈட்டிய சிமெண்ட் முதலாளிகள் சந்திரசேகர் ஆட்சியில் இன்னொரு சுற்று விலையேற்றம் செய்துள்ளனர். இதேபோல 11 டயர் கம்பெனிகள் கூட்டுச் சேர்ந்து, உற்பத்தி தேக்கம் நிலவிய போதிலும் 5 முதல் 7.5% விலையேற்றம் செய்து கொழுத்த லாபத்தை ஈட்டியுள்ளனர். இன்னொரு பக்கம் மருந்து கம்பெனிகள் முன்னறிவிப்பின்றி தன்னிச்சையாக விலையேற்றம் செய்து கொள்ளையடிக்கின்றன.

இவற்றையெல்லாம் நியாயப்படுத்துவதற்காக அரசுத் துறை உற்பத்திப் பொருட்களின் விலையையும் சந்திரசேகர் அரசு கிடுகிடுவென உயர்த்தியுள்ளது. இரும்பு எஃகு, நிக்கல், செம்பு முதலான உலோகங்களின் விலையை 10 முதல் 15% வரை அரசே உயர்த்தியுள்ளது. காப்பிக் கொட்டை பற்றாக்குறையைக் காட்டி, கிலோ ஒன்றுக்கு ரூ.7 முதல் ரூ.8 வரை காபி போர்டு விலையேற்றம் செய்துள்ளது.




இதுவும் போதாதென்று தரகுப் பெருமுதலாளிகளின் ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்குத் தாராள சலுகைகள், ஏகபோக கட்டுப்பாட்டுச் சட்டத்தை மேலும் தளர்த்துவது, அன்னிய ஏகாதிபத்திய நிறுவனங்கள் முதலீடு செய்வதில் ஏற்படும் நிர்வாகத் தாமதங்களைப் போக்க உடனடி நடவடிக்கைகள், 40% அன்னிய முதலீடு கொண்ட கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்கு எவ்விதத் தடையுமின்றி உடனடி ஒப்புதல், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமது கறுப்புப் பணத்தை இந்தியாவில் முதலீடு செய்யத் தாராள வசதிகள், அவர்களது முதலீட்டை வரவேற்க கவர்ச்சிமிகு கடன் பத்திரங்கள் என்று பாசிச ராஜீவ் துவக்கி வைத்த அதே தாராளவாதக் கொள்கையை மேலும் விரிவுபடுத்துவதையே சந்திரசேகர் கும்பல் தனது தொழிற் கொள்கையாகக் கொண்டுள்ளது.

போதாக்குறைக்கு நாட்டை அடகு வைத்து சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கடும் நிபந்தனைகளை ஏற்று ரூ.6,000 கோடிக்கு கடன் வாங்கவும் சந்திரசேகர் கும்பல் முடிவு செய்துள்ளது. இதுதவிர கோடிக் கணக்கில் ஆசிய வளர்ச்சி வங்கியிடம் கடன் வாங்கவும் ஓடுகிறது. பூதாகரமான அன்னியக் கடன் சுமையும், திருப்பிச் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டிச் சுமையும், ரூ.15,000 கோடியையும் தாண்டி விட்ட பற்றாக்குறையும், இரட்டை இலக்க பணவீக்கமும் காரணமாக ஐந்தாண்டுத் திட்டத்தையே வெட்டிச் சுருக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். திட்ட விடுமுறை அறிவிக்கப்படவில்லையே தவிர, ஐந்தாண்டுத் திட்டமே கிடப்பில் போடப்பட்டு தறிகெட்ட, அராஜகமும் கொள்ளையுமே சந்திரசேகர் கும்பலின் பொருளாதாரக் கொள்கையாகி விட்டது.

எருதை இரண்டு முறை தோலுரிப்பது போல, இப்போதைய வரிவிதிப்புகள் மட்டுமின்றி பட்ஜெட்டின் போதும் புதிய வரிகள் விதிக்கப்படும் என்று திமிராகக் கொக்கரிக்கிறது சந்திரசேகர் கும்பல். வறுமையில் உழலும் கோடானு கோடி மக்களைப் பார்த்து இப்பொருளாதாரச் சுமைகளை ஏற்றுக் கொண்டு நாட்டுக்காகத் தியாகம் செய்யுமாறு உபதேசிக்கிறது.

இனியும் தாங்கிக் கொள்ள முடியாது; சகித்துக் கொள்ள முடியாது. நாட்டின் நலன் கருதி தியாகத்துக்கு மக்கள் தயாராக வேண்டும். தம்மீது ஏற்றப்படும் சுமைகளைத் தாங்கிக் கொள்வதற்காக அல்ல; பாசிச ராஜீவ் கும்பலோடு சேர்த்து அதன் பாதந்தாங்கி சந்திரசேகர் கும்பலையும் தூக்கியெறிய புரட்சியில் இறங்குவதற்காகத் தான் அந்தத் தியாகம்!

● — குமார்



படிப்பகம்

# அரசியல் சூதாட்ட துருப்புச் சீட்டுகள்

ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் உத்திகள் வாக்காளர்களை குறி வைத்துவிட்டன. ஓட்டு சீட்டு அரசியலின் மைய சக்தி இன்று பி.ஜே.பி! பிற கட்சிகளின் தேர்தல் வியூகங்கள் இதன் தாக்குதல் திசைவழியை ஒட்டியே அமைகின்றன. கடை கோடி வலதுசாரி இந்து மதவெறி தான் பி.ஜே.பியின் அரசியல் ஆயுதம்! நாட்டை அலைக்கழிக்கும் வேறு எந்த விவகாரங்கள் பற்றியும் அதற்கு கவலையில்லை.

இந்து - இந்தி - இந்தியா' - இதற்கு எதிரானவர்கள் தேச விரோதிகள் - முஸ்லீம்களின் ஓட்டுக்காக இந்துக்களின் பாரம்பரிய, தேசீய உரிமையை காட்டிக் கொடுப்பவர்கள் - இப்படி இந்து மத வெறியூட்டி தனது பார்ப்பன - பணியா உயர்சாதி தலைமையில் பெரும்பான்மை இந்துக்களை தனது ஓட்டு வங்கிக்குள் திணித்து விட வெறியோடு முயல்கிறது. அதில் கணிசமான வெற்றியும் பெற்றிருக்கிறது.

இதற்கு நேரெதிராக தன்னை சிறுபான்மை முஸ்லீம்களின் நாயகனான, கீழ் சாதி இந்துக்களின் தலைவனாக முடிசூட்டிக் கொண்டு வி.பி.சிங்கின் ஜனதா தளம் களத்தில் குதிக்கிறது. மண்டல் கமிஷன் - இட ஒதுக்கீடு - அயோத்தி பாபர் மசூதி இவற்றின் விசுவாசமிக்க பாதுகாவலனாக நடிக்கிறது. ஏற்கெனவே இந்த வியூகத்தில் வி.பி. சிங் கும்பல் குறிப்பிடத்தக்க ஆதரவை பெற்றுள்ளது. அதை பிராந்திய கட்சிகளின் மூலம் ஓட்டுக்களாக மாற்றி வெற்றிவாகை சூட முயற்சிக்கிறது.

இதில் ராஜீவ் தலைமையிலான காங்கிரஸ் ஒதுங்க இடமில்லாமல் தவிக்கிறது. காங்கிரசின் ஒரே அரசியல் ஆயுதமான இரட்டை வேடம் நைந்து கிழிந்து நகைப்பிற்குரிய பொருளாகிவிட்டது. குறிப்பாக கடந்த பொது தேர்தலின் இறுதி கட்டத்தில் அதன் பித்தலாட்ட அரசியல் அவமானகரமாக நிர்வாணமானது. அயோத்தி பாபர் மசூதியில் ராமஜென்ம பூமிக்கு அடிக்கல் நாட்ட அனுமதித்தது. பிறகு அதற்கு மேல் அனுமதிக்காமல் முஸ்லீம்கள் பக்கம் ஓடி நின்று கொண்டு எதிர்த்தது.

இதனால் நாட்டுக்கு ஆழமான வடு — இந்து - முஸ்லீம் கலவரம் - ஏற்பட்டது. இந்து - முஸ்லீம் மக்களால் நிரம்பி வழிந்த காங்கிரசின் ஓட்டு வங்கி ஈ ஓட்டியது. மறுபுறம் பகுஜன் சமாஜ் கட்சி போன்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கான தனி அமைப்புகள் உருவாகி, காங்கிரசின் அடித்தளத்திற்கு ஆட்டத்தை கொடுத்தது. காங்கிரசின் கிராம அளவிலான ஓட்டு வங்கியை அப்படியே தன் பக்கம் இழுத்துக் கொண்டது.

இதனால் அகில இந்திய தேசிய காங்கிரசு, இந்தி பேசும் மாநிலங்களில் சுருங்கி, அதிலும் பல இடங்களில் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டது. அவசரப்பிரிவு 'வார்டு'க்கு அனுப்பப்பட்ட காங்கிரசுக்கு பழைய நிலைக்கு திரும்ப ஏராளமான செயற்கை ரத்தம் தேவைப்படுகிறது. எனவே, உடனடியாக தேர்தலை சந்திக்கப் பயப்படுகிறது! சந்திரசேகரின் நிழல் அரசு மூலம் தனக்கு சாதகமான சூழ்நிலையை செயற்கையான முறையில் உருவாக்குகிறது. அதுவரை தேர்தலைத் தள்ளி போடவும், முடிந்தால் தேர்தலை நிறுத்தி வைக்கவும் முயல்கிறது.

ஏறக்குறைய சந்திரசேகரின் நிலையும் இதுதான்! பரிதாபகரமானது என்னவென்றால் எவ்வளவு காலம் அவகாசம் இருந்தாலும் சந்திரசேகரால் சுயமாக ஒரு பிராந்திய கட்சியின் தலைவராகும் நிலைக்கு கூட உயரமுடியாது! சகுனி வேலையை தவிர அவருக்கு வேறு எதிலும் அனுபவமோ, அறிவோ கிடையாது! அவர் தேர்தலை சந்திக்க சம்மதிப்பது, விஷத்தைக் குடிக்க முன் வருவது போன்றது!

'போது தேர்தல் எப்போது?'

'அது ஏது இப்போது!' நாட்டில் தலைவிரித்தாடும் மதக்கலவரம் அந்தரத்தில் தொங்கும் ராமஜென்ம பூமி /பாபர் மசூதி விவகாரம், தீராத காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினை, புதிதாக அசாம் பிரிவினை இயக்கம், ஆறாத புண்ணை ஏற்படுத்தி இருக்கும் மண்டல் கமிஷன் - இடஒதுக்கீடு சாதிய பகைமை — இப்படி எண்ணிலடங்கா வேதனையில் நாடு சிதறுண்டு போகும் அபாயத்தில் சிக்குண்டிருக்கிறது.

'- இன்றைய முக்கிய தேவை மதசார்பின்மை, தேச ஐக்கியம், பல்வேறு மத, சாதி, இன, மொழி மக்களிடையே பரஸ்பரம் நம்பிக்கை இவற்றை ஏற்படுத்தினால்தான் தேர்தலை பற்றி சிந்திக்க முடியும்! ஆக இப்போதுள்ள நிலையில் தேர்தல் நடத்தினால் ரத்த ஆறு ஓடும் என்கிறார்கள், ராஜீவ் - சந்திரசேகர் தலைமையினர்.

உண்மைதான்! மறுக்கவில்லை! ஆனால் இந்த சீர்கெட்ட நிலையை நாட்டுக்கு சீதனமாக கொடுத்தது யார்? சந்தேகம் இல்லாமல் இதே ஓட்டு சீட்டு அரசியல் கட்சிகள்தான்! குறிப்பாக இந்திரா - ராஜீவ் குடும்பம்தான்! இதை புதிதாக யாரும் நிரூபிக்க வேண்டியதில்லை! ஆனந்தபவனை மட்டுமா நாட்டுக்கு சீதனமாக கொடுத்தது நேரு இந்திரா - ராஜீவ் குடும்பம்? வெட்கக்கேடு!

தேசத்தை நிலைகுலைய வைத்திருக்கும் இந்த பிரச்சினைகளை வேரோடு பிடுங்கி எறிய வாரிசுரிமை கட்சிகளும், புதிதாக தோன்றிய தேர்தல் கட்சிகளும் என்ன திட்டம் வைத்துள்ளன? அதில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளன? எந்த கால இலக்குக்குள் களைந்து எறிய போகின்றன? என்பதை எப்போதாவது மக்களிடம் பகிரங்கப் படுத்தி இருக்கிறார்களா? இல்லை!

மாறாக, நாடு இப்போது எதிர்கொண்டுள்ள ''அபாய நிலையை'' மேலும் மேலும் சிக்கலாக்கி அச்சிக்கலை அவிழ்க்க வந்த அவதாரங்களாக தங்களுக்கு ஒளிவட்டம் அழைத்துக் கொள்வதுதான் இவர்களது அரசியல் சாணக்கியம்! இந்த சாணக்கிய அரசியலை தொழில் சுத்தமாக செய்வது எப்படி என்பதுதான் இவர்களது தீராத கவலை!

## பாரதீய ஜனதா கட்சி

நாட்டின் கவனத்தை ஓட்டு மொத்தமாக தன் மீது குவித்து வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தது. பி.ஜே.பி. உடனே அடுத்த தேர்தலை எதிர்பார்த்த அதன் சாணக்கியத் தனத்தில் மண்விழுந்தது. அயோத்தி ராமர் ஜென்மபூமியில் கோயில் கட்டுவதில் உறுதியாய் இருந்த இந்து மதத்தின் தவப்புதல்வர்கள் என்று' ஓட்டுக்களை குவித்துவிடும் ஆசை கனவாகிப் போனது. ராஜீவ் கும்பல் போட்டியில் நேரம் பார்த்து குறுக்கே விழுந்து விட்டது. வெறுத்து போன அத்வானி கும்பல் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராகிறது.

இதுநாள் வரையில் ராமஜென்ம பூமி என்பது மத நம்பிக்கையிலானது, பெரும்பான்மை இந்துக்களின் உணர்விலிருந்து எழுவது என்று கூறியது. ஆதாரம் காட்ட முடியாது. நீதி மன்றத் தீர்ப்புக்கும் பணியமுடியாது என்று திமிராக பேசியது. இப்போது ஆதாரங்களை முன்வந்து தருகிறது (போலி என்பது வேறுகதை). நீதி மன்றத் தீர்ப்பை பரிசிலிப்பதாக தலையாட்டுகிறது. ஏன் இந்த மனமாற்றம்! தற்காலிகமாக பகுதியை விட்டுக் கொடுத்து நீண்ட கால நோக்கில் முழுமையை கைப்பற்றும் யுத்த தந்திரம் இது!

உடனடியாக அதிகாரத்தைப் பிடிக்க முடியாமல் போனாலும் நாட்டின் அரசியல் போக்கை தீர்மானிப்பதில் தன்னுடைய பிரதானப் பங்கை விட்டு விடக் கூடாது என்பதில் குறியாய் இருக்கிறது. அடுத்த தேர்தல் வரை அயோத்தி விவகாரத்தை அணைய விடாமல் காக்க முயற்சிக்கிறது. போராட்டம் என்ற பெயரில் கர்சேவா, சத்தியாகிரகம் என்று தொடர்ந்து பாபர் மசூதியில் ராம ஜென்ம பூமிக்கு ஆதாரங்களை புதைக்கிறது; உருவாக்கிறது. ஆதரவாக வட மாநிலங்களில் கிராமங்கள் வரை இந்து மதவெறி பிரச்சாரங்களை நடத்துகிறது.

''ராமஜென்ம பூமிக்காக உயிர்நீத்த தியாகிகள்'' என்ற பெயரில் ஏராளமான ஒளி, ஒலி நாடாக்களை விநியோகிக்கிறது. ''நாம் ஒருவர் (இந்து) ரத்தம் சிந்தினால், 10 முஸ்லீம்களை ரத்தம் சிந்த வைப்போம்'' என்று கொலை வெறியூட்டுகிறது. ''ஆக்ரா



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

தாஜ்மகாலை தரை மட்டமாக்குவோம்'' ''முஸ்லீம்களே இந்துக்களுக்கு அடிபணி யுங்கள்; இல்லையேல் பாகிஸ்தானுக்கு ஓடுங்கள்'' என்று எழுதிய ராட்சத பலூன்க ளையும், பட்டங்களையும் முஸ்லீம் இடங்க ளில் இறக்கி பீதியூட்டுகிறது.


வி.பி. சிங் ஆட்சியில் அரசின் முக்கிய ஆலோசனைகளில் தனது கொள்கை முடிவு களை திணித்தது போலவே, சந்திரசேகர் ஆட்சியையும் தனக்கு சாதகமாக பயன்ப டுத்துகிறது. அயோத்தி விவகாரத்தில் 'கோர்ட்' தீர்ப்பை தமக்கு சாதகமாக்குவது, அயோத்தியில் தொடர்ந்து 'கர்சேவா' 'சத்தி யாகிரகம்' நடத்தும் தனது திட்டத்திற்கு சந்தி ரசேகர் மற்றும் உ.பி. அரசை பணிய வைத்து விட்டது. அசாம் விடுதலை முன்னணியை ஒடுக்க - 'பஜ்ராங்' நடவடிக்கை எடுத்து பி.ஜே.பி.யை நெகிழ வைத்து விட்டது, சந்தி ரசேகர் அரசு! கைமாறாக, சந்தேரசேகர் அரசு, ராஜீவ் கும்பலின் அரசியல், பொரு ளாதார கிரிமினல் குற்றங்களை அதிகாரப் பூர்வமாக அழிப்பதை கண்டுகொள்ளாமல் மௌனம் சாதிக்கிறது. பி.ஜே.பி. அதே சம யம் பகுதியளவிலாவது ராமஜென்ம பூமி கோவில் கட்டும் பணி துவக்கினால் தான் தனது ஆதரவாளர்களிடம் நம்பிக்கை ஏற்ப டுத்த முடியும் என்ற நெருக்கடியில் சிக்கியி ருக்கிறது.

★ தற்காலிகமாக அரசுடன், முஸ்லீம் அமைப்புகளுடன் பேச்சு வார்த்தை - ஒப்பந் தத்தில் ஈடுபடுவது; தனது திட்டத்தில் சிறித ளவை இடைக்காலமாக விட்டுக் கொடுப் பது (நிறுத்தி வைப்பது)

★ செங்கல் பூஜையிலிருந்து அயோத்தி பாபர் மசூதி இடிப்புவரை நடத்திய போராட் டங்களை இந்துமதத்திற்கான தியாகங்களாக கிராமங்கள் வரை எடுத்துச் செல்வது.

★ சிறுபான்மை முஸ்லீம் மக்களின் 'நாய கர்'களான முலாயம் சிங், வி.பி.சிங் ஆதரவு கருத்தை உடைப்பது.

இந்த நோக்கில் அடியெடுத்து வைக்கி றது, பி.ஜே.பி. தனது வெற்றியை மீண்டும் மிக விரைவில் பறிப்பதற்கு வசதியாக பின்




வாங்குவது போல் மற்றவர்களுக்குப் போக்கு காட்டுகிறது.

## வி.பி.சிங்

வி.பி. சிங்கிடம் இழப்பதற்கு அரசியல் ரீதியில் ஏதுமில்லை, ''மதசார்பின்மை'' 'சமூக நீதி' ஆதரவு வேடத்தை தவிர! இந்த இரு கொள்கைகளுக்காக அதிகாரத்தை தியாகம் செய்தவராக அவர் இப்போது ஊர் ஊராக புலம்பிக் கொண்டிருக்கிறார். ''மண் டலா, கமண்டலமா'' என்றபோது, தான் மண்டலை தேர்தெடுத்துக் கொண்டதாக கூறுகிறார்.

பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒ துக்கீடு மூலம் சமூக நீதி கிடைக்கவும், அயோத்தி பாபர் மசூதியை காத்ததன் மூலம் மத சார்பின்மையை பாதுகாப்பதற்காகவே தான் அரசியலில் நீடிப்பதாக கண்ணைக் கசக்கிக் கொண்டு சொல்கிறார்.

ஆனால் அவரது 11 மாத கடந்த கால ஆட்சியைப் பார்த்தாலே அவர் யாருக்காக இருந்தார், எந்த கொள்கையை பாதுகாத் தார் என்பது தெரியும். பஞ்சாப், காஷ்மீர், அயோத்தி, போபர்ஸ், கிரிமினல் அரசி யல்... இப்படி நாட்டை பிடித்திருக்கும் நோய்களுக்கு தான் தீர்வு வைத்திருப்பதாக ஆரவாரமாக ஆட்சியில் ஏறினார். புதிய இந்தியாவை எதிர்நோக்கி மக்கள் நம்பிக் கையோடு காத்திருந்தனர். நாட்கள் வாரங்க ளாயின. வாரங்கள் மாதங்களாயின. மாதங் கள் ஆண்டை நெருங்கவும் ஆட்சியும் கவிழ்ந்து விட்டது. பலன்: பிரச்சனைகள் கடக்க முடியாத அளவு மலையாகிப் போயின!

இதற்காக மக்கள் கொடுத்த விலை தான் எவ்வளவு? உயிர்பலிதான் எவ்வ ளவு? பஞ்சாபில் கொலை விழாத நாட்களே இல்லை! இந்து மதவெறியர்களின் அட்டகா சத்தால் வட மாநிலங்கள் அனைத்தும் பஞ் சாப் ஆனது. பழைய வாக்குறுதிகள் மறைந்து, புதிய வாக்குறுதிகள் உலாவந் தன. அனைவருக்கும் வேலை, அரசு பிரச் சார நிறுவனங்களுக்குத் தன்னாட்சி, நிலை யான விலைவாசி ஆகிய புதிய வாக்குறுதிக ளும் மோசடிகளாயின. ''ஜனநாயக படு கொலை''கள் அரசியலில் நிரந்தரமானது. மேகம் தொகுதி அதற்கு எடுப்பான உதார ணமானது.

இதையெல்லாம் மறைக்கத்தான் கடைசி காலத்தில் அதுவும் மக்களுக்கு நல் வாழ்வு அளிக்க அல்ல, அரசியல் எதிரி களை சமாளிக்க 'மண்டலையும்' 'மசூதி' யையும் அவசரமாக எடுத்து போர்த்திக் கொண்டார், வி.பி.சிங். உண்மையில் வி.பி. சிங்குக்கு பிற்படுத்தப் பட்டவர்களின் மேல் கொஞ்சமாவது அக்கரை இருக்குமானால், மண்டல் கமிஷன் முக்கியமாக சுட்டிகாட்டி யுள்ள நிலச்சீர்திருத்தத்தை அமுல்படுத்தி இருப்பார். ஓரளவு சமூக நீதியை கொண்டு வர துணைபுரியும் இந்த பிரதான ஆலோச னையை புறக்கணித்தார். இல்லாத வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு என்று பிற்படுத்தப் பட்ட மக்களை பச்சையாக ஏமாற்றினார். அதையும் 'தேசீய' அளவில் அமுல் படுத் தாது அந்த மாநிலங்களின் விருப்பம் என்று கை கழுவினார்.

அதேபோல், அயோத்தியில் ராம ஜென்ம பூமி விவகாரத்தில், தன் ஆட்சியை பாதுகாத்த பி.ஜே.பி.யுடன் கடைசிவரை இரட்டை வேடம் போட்டு முடிவு சொல் வதை தவிர்த்தார். அவகாசம் கேட்டு அதிகா ரத்தை சுவைத்தார். தும்பைவிட்டு வாலை பிடித்து உதைவாங்கி அதையே தியாகம்




படிப்பகம்

www.padippakam.com

என்று சொல்லி திரிகிறார். அவருடைய சொந்தக் கட்சியினரே அவருடைய தியாகத்தை நம்பாமல் ஆளும் கட்சிக்கு தாவிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் போலிக் கம்யூனிஸ்ட்டுகள் வி.பி.சிங்கை ''தேசிய'' தலைவராக வரித்துக் கொண்டனர். தங்கள் ஓட்டு வங்கியை பெருக்கிக் கொள்ள எரியும் வீட்டில் பிடுங்கியது வரை லாபமென அவரைக் கெட்டியாக பிடித்து கொண்டனர். கேரளாவில் வளர்ந்து வரும் ஆர்.எஸ்.எஸ்.க்கு முகம் கொடுக்க திராணி இல்லாமல் வி.பி. சிங்கை வைத்து தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்கள் மற்றும் சிறுபான்மை முஸ்லீம், கிருஸ்துவர்களுக்கு தூண்டில் போடுகின்றனர். தி.மு.க.வை போலவே வி.பி. சிங்கை வரவேற்று புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

★ பாபர் மசூதியை பாதுகாக்க குரல் எழுப்புவதன் மூலம் - சிறுபான்மை முஸ்லீம் நண்பனாக நடிப்பது - சந்தர்ப்பவாதி உ.பி. முதல்வர் முலாயம் சிங் யாதவை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி உத்திரபிரதேச, ஓட்டு வங்கியை மொத்தமாக கைப்பற்றுவது.

★ மண்டல் கமிஷன் - இடஒதுக்கீடு - 'சமூக நீதி காவலராக' தனக்கு தானே பட்டம் சூட்டிக் கொள்வது; இதன் மூலம் முஸ்லீம் ஓட்டுக்களை போலவே கணிசமான கீழ் சாதி இந்து ஓட்டுக்களுக்கும் குறிவைப்பது; 'இடது' சாரி கட்சிகளை தன் வாலை பிடிக்க வைப்பதில் வெற்றி பெறுவது — இவை தான் வி.பி.சிங்கின் தேர்தல் உத்திகள்.

## ராஜீவ் காந்தி

ராஜீவ் காந்தியின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள 'ஒற்றுமை'யைப் பற்றி நாம் அறிந்ததுதான். இப்போது அவர் அதிகார பலம் கூடிய நிலையில் தெம்பாக இருக்கிறார். தன்னுடைய நிழல் அரசு ஒன்றை சந்திரசேகர் தலைமையில் கட்டியமைத்துள்ளார். இதன் மூலம் வரும் தேர்தலில் வெற்றியடைந்து விட்டதாக உண்மையிலேயே நம்பிக் கொண்டிருக்கிறார்.

எப்போதும் போலவே நாட்டை பிடித்துள்ள பிரச்சனைகள் பலவற்றை அவர் ஆட்சியில்தான் தாயும் தந்தையுமாக இருந்து பெற்றெடுத்தார். அயோத்தி பிரச்சினை அதில் ஒன்று! மீண்டும் அயோத்தி பிரச்சனையில் குட்டையை குழப்புவதில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

அப்பட்டமாக அயோத்தியில் ஆர்.எஸ்.எஸ். நிலைப்பாட்டை ஆதரிக்கும் இந்துவெறி பிரச்சாரத்தை காங்கிரசு மேற்கொள்கிறது.

இதற்காக வசந்த்சாத்தே போன்ற முன்னாள் காங்கிரசு மந்திரிகளை பணியில் அமர்த்தி இருக்கிறார். மேலும் சந்திரசேகருக்கு ஒரு ஆணையும் போட்டுள்ளார். ஐவர் அடங்கிய நீதிபதி குழுவை நியமித்து, பாபர் மசூதி இடத்தில் இதற்கு முன்னர் ராமர் கோயில் இருந்ததா, இல்லையா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்கிறார்.

மேலும் அயோத்தி பாபர் மசூதியை இடித்து ராமர் கோயிலை கட்டும் ஒரு பினாமி இந்து மதவெறி அமைப்பை உருவாக்க சந்திரசேகர், ராஜீவ் சார்பாக சதி செய்கிறார். சர்வதேச கிரிமினலும் தனது நெடுநாளைய நண்பருமான சந்திரா சாமியை இதற்காக நியமித்திருக்கிறார். அவரிடம் அதிகாரப் பூர்வமாக ஒப்படைத்திருக்கிறார். சந்திரா சாமி, மத்திய மந்திரிக்குரிய அனைத்து பரிவாரங்களுடன் அயோத்திக்கும் டெல்லிக்கும் பறக்கிறார்.




இந்துக்களின் மொத்த பிரதிநிதி என்ற உரிமை பி.ஜே.பி. ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளுக்கு மட்டுமே சொந்தமல்ல என்று அயோத்தி உள்ளூர் மதவெறி நிறுவனங்களையும், பகுதியில் செல்வாக்குள்ள இந்துமத தலைவர்களையும், மகந்துகளையும் ஒன்று திரட்டும் வேலையில் தீவிரம் காட்டுகிறார். முஸ்லீம் மத நிறுவனங்களை உடைப்பதிலும் வெற்றி கண்டிருக்கிறார்.

அதே நேரத்தில், பாபர் மசூதியை ஆர்.எஸ்.எஸ். இடிப்பதை எதிர்த்து நின்று பெரும்பான்மை முஸ்லீம்களின் ஆதரவை பெற்ற உ.பி. மாநில முலாயம்சிங் அரசு நீடிக்க ஆதரவு தருகிறார் ராஜீவ் ஆனால், சங்கராச்சாரி போன்ற மதத் தலைவர்களை தனித்தனியாக சந்தித்து அவர்கள் கருத்துகளுக்கு மதிப்பு கொடுப்பதாக கௌரவிக்கிறார். முன்னாள் பஞ்சாப் கவர்னர், அரசியல் கிரிமினல், எஸ்.எஸ்.ரே, தலைமையில் இதற்காக தனி குழுவை அமைத்துள்ளார்.

மண்டல் கமிஷன் - இட ஒதுக்கீட்டை, பார்ப்பன - பனியா உயர்சாதி இந்து ராஜீவ் காங்கிரசு தலைமை மூர்க்கமாக எதிர்க்கிறது. மண்டல் கமிஷன் எதிர்ப்பு கலவரங்களை டெல்லியில் தலைமைதாங்கி நடத்தியது. கலவரக்காரர்களுக்கு பொருள், பணம், இடம் உட்பட அனைத்து உதவிகளையும் கொடுத்து உதவியது.

காஷ்மீர், பஞ்சாப், அசாம் உட்பட நாட்டை எதிர்கொண்டுள்ள முக்கிய விவகாரங்களில் அப்பட்டமாக பாசிச நிலைபாடுகளை அமுல்படுத்துமாறு சந்திரசேகர் அரசுக்கு ஆணையிடுகிறது.

தேர்தலை சந்திப்பதற்கு வசதியாக, குறிப்பாக தன் மீது உள்ள போபார்ஸ் உட்பட அனைத்து கிரிமினல் குற்றங்களில் இருந்தும் சந்திரசேகர் ஆட்சி மூலம் அதிகாரப்பூர்வமாக பரிசுத்தம் சான்றிதழை பெற்றுவிட துடிக்கிறது. அதே நேரத்தில் தன் கட்சியிலும், ஆட்சியிலும் தன்னுடைய தலைமையை உறுதி செய்து கொள்வதற்கும் இந்த நிழல் அரசைப் பயன்படுத்துகிறது.

பல்வேறு பிரச்சனைகளால் புண்ணாகிப் போன இந்தியாவையும் இந்திய நாட்டு மக்களின் உள்ளங்களையும் சுகமளித்து தேற்றுவதற்காக, சந்திரசேகர் அரசை ஆதரிப்பதாக தேர்தலை தள்ளிப்போடுவதாக கூறிய ராஜீவ் மாபெரும் கபடவேடதாரி!

★ உள்ளூர் அளவில், பகுதி பகுதியாக இந்து மதவெறிக்கு முன்நின்று ஆதரவு! மத்தியில் மட்டும் சிறுபான்மை முஸ்லீம் உரிமைக்களுக்காக வாதாடுவதாக இரட்டை வேடம்.

★ பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து மதவெறி கும்பல்கள் திரட்டி வைத்திருக்கும் இந்துமத ஆதரவை தன் பக்கம் ஓட்டு வங்கிக்குள் இழுத்துபோட பினாமியாக இந்துமதவெறி அமைப்புகளை உருவாக்கும் புது உத்தி.

★ தன் தலைமையை விட்டால் நாட்டை ஆள வேறுநாதி இல்லை என்ற கருத்தை உருவாக்குவது.

தேர்தலுக்கு நாள் கடத்துவதும், தேர்தலை தள்ளிப் போடுவதும் தேர்தலை தற்காலிகமாக கை கழுவுவதற்கு செல்வதும் மேற்கூறிய காரணங்களின் தர்க்க ரீதியான வளர்ச்சிதான் தீர்மானிக்கும்! மாறாக ஓட்டுக் கட்சி தலைவர்கள் நாள் குறிப்பதாலோ, மக்கள் விருப்பத்தினாலோ தேர்தல் வருவதில்லை! பாராளுமன்ற ஜனநாயகம் நிலைப்பதும் நீடிப்பதுமில்லை!

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்படவில்லை என்று ஓட்டுக்கட்சிகள் ரகசிய பேரத்திற்கு வரவும் வாய்ப்பு இருக்கிறது. நாட்டின் எந்த ஒரு மூலையிலும் வேரும் விழுதும் இல்லாத ஒப்புக்கு ஒரு கட்சி கூட இல்லாத சந்திரசேகரை நாட்டின் பிரதமராக ஓட்டுக் கட்சியினர் சம்மதித்தது போல நாளை ஒரு ராணுவ - அதிகார வர்க்க கும்பலின் ஆட்சிக்கும் இவைகள் தலையாட்டும். அதிகாரத்தை கும்பலாக பங்கு போட்டுக் கொள்ளும்.

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com




# கூட்டுக் கொள்ளைக்குக் கூட்டுறவு சங்கங்கள்

அடிதடி, வெட்டுக்குத்து, கள்ள ஓட்டு, ஓட்டுப்பெட்டிக் கடத்தல்... இவைதான் தமிழகம் முழுவதும் நடந்த கூட்டுறவு சங்கத் தேர்தல்களின் தலைவிதியைத் தீர்மானித்தன. இவற்றில் பலம் பொருந்தியவர்கள் அந்தந்த சங்கங்களில் வெற்றி பெற்றவர்கள். தி.மு.க. ஆட்சி பீடத்தில் இருப்பதால் கூட்டுறவு சங்க அதிகாரிகள் துணையோடு இவற்றை எளிதாக செய்து முடித்தது. இப்படி ஆட்சியைப் பிடித்தவர்தான் தி.மு.க.வைச் சேர்ந்த ஆலங்குடி எண்.3 விவசாயிகள் கூட்டுறவு சங்கத் தலைவர் தங்கவேலு. அதிகாரிகள், ஊழியர் சிலர் கூட்டோடு இவர் செய்யும் அட்டூழியங்கள் ஏராளம்.

சங்கத்தின் மூலம் தயாரிக்கப்படும் தரமற்ற சோப்பை நியாயவிலைக் கடைகளில் விற்க வேண்டும் எனக் கட்டாயப் படுத்துகிறார்கள். நியாய விலைக் கடை பணியாளர்கள் மறுத்தால் வேலை நீக்கம் செய்வோம் என அதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர். மேலும் சங்கத்தின் சேமிப்புக் கூடம் இடிந்து விழும் நிலையில் செடிகள், புல் பூண்டுகள் முளைத்து பரிதாபமாகக் காணப்படுகிறது. சங்கத் தலைவரும் சரி, அதிகாரிகளும் சரி இதை முறைப்படுத்த அக்கறை எடுத்துக் கொள்ளவே இல்லை. மேலும் சங்கத்தின் செயலர் தியாகராஜன் என்பவர் அப்பாவி விவசாயிகளை ஏமாற்றி அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடனில் கமிஷன் வாங்கி, பல ஊழல்கள் செய்ததால் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டார். ஆனால் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் இச் சங்கத்திற்கே பணிபுரிய வந்து விடுகிறார். இப்படிப் பலமுறை நடந்துள்ளது.

இதுவல்லாமல் அரசியல்வாதிகளின் துணையுடன் சில ஊழியர்களும் கொட்டமடிக்கின்றனர். கோவிந்தராசு என்ற ஊழியர் பணி நேரத்தில் குடித்துவிட்டு வந்து ரகளை பண்ணுவதையும் மற்றவர்களை மிரட்டுவதையுமே தனது வாழ்க்கையாக வைத்திருக்கிறார்.

எப்படியோ பதவியில் அமர்ந்தாகி விட்டது. அடுத்த தேர்தல்வரை தம்மை தட்டிக் கேட்க ஆள் யார் இருக்கிறார்கள் என்ற திமிருடன் தலைகால் புரியாமல் குதூகலிக்கிறார்கள். இவர்களது இந்தக் கொட்டம் வெகு நாளைக்குத் தொடராது; விரைவில் மக்கள் பதிலடி கொடுப்பார்கள்.

**தகவல்: பாசு, ஆலங்குடி.**

# கோலையாளிகளின் காவலர்களாக போலீசு





ஒரு மோட்டார் பம்பு செட் ரூமுக்கு அருகில் கையும் காலும் கட்டப்பட்டு கழுத்து அறுக்கப்படடு, ஆண்மை உறுப்பு எரிக்கப்பட்ட பயங்கரமான நிலையில் பிணமாகக் கிடந்தான் ஆட்டோ சுரேஷ். இது கடலூரில் 4 மாதங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். கடலூர் மக்களின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியது. இந்தக் கொலைக்கான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் போலீசு அலட்சியம் காட்டியது. இக்கொலை சம்பவத்திற்கு நீதி கேட்டு ஆட்டோ டிரைவர்கள் ஊர்வலம் சென்றதால் போலீசு அவர்களைத் தனக்கே உரிய பாணியில் அடித்து நொறுக்கியது. ஆட்டோ சுரேஷின் அண்ணன் ராஜாராமன், தம்பியைக் கொலை செய்த குற்றவாளிகளை அடையாளம் காட்டியும் போலீசு ஆதாரம் இல்லையென தட்டிக் கழித்தது. 4 மாதங்களாக நீதிக் கேட்டு போலீசு நிலையத்திற்கு கால்கடுக்க நடந்த ராஜாராமனிடம், ஆயிரக் கணக்கில் பணம் கறந்துள்ளது. இந்நிலையில் சமீபத்தில் 'நக்கீரன்' பத்திரிகையின் நிருபரிடம், கடலூர் புதுநகர் ஏட்டு நடராஜன். இது குறித்து சில தடயங்களை உளறியிருக்கிறார். ஏட்டு பேசியதை மைக்ரோ டேப் ரெக்கார்டரில் பதிவு செய்துள்ளதாக ஆதாரம் காட்டி 'நக்கீரன்' கட்டுரை ஒன்று வெளியிடவே மீண்டும் இவ்விசயம் பரபரப்படைந்தது.

ஆட்டோ சுரேசும், பழமலையும் நெருங்கிய நண்பர்கள். சுரேசுக்கு பழமலையின் மனைவிக்கும் இடையே கள்ளத் தொடர்பு இருந்ததாகவும் இதனால் பழமலை ஆட்களை ஏவி சுரேஷை கொலை செய்தான் என்றும் பகுதி மக்கள் கூறுகின்றனர். "பழமலையின் கையாளாக இருந்து வரும் கேடி காமராஜ்தான் இக்கொலையை செய்ததாக நம்புவதாகவும், அவனைப் பிடித்து தட்டினால் உண்மைகளைச் சொல்லி விடுவான். ஆனால், தற்போது பம்பாய்க்கு தப்பிப் போய்விட்டான்" என்று ஏட்டு நடராஜன் நிருபரிடம் கூறியிருக்கிறார். மேலும், இந்த கொலைக்கான விசாரணையை நடக்க விடாமல் எம்.எல்.ஏ. கிருஷ்ண மூர்த்தியும் ஒரு எம்.பி.யும் குறுக்கீடு செய்வதாகக் கூறியிருக்கிறார்.

இந்த ஆதாரத்தின் அடிப்படையில் கொலையாளிகளைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும், கடலூர் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரியும் கடலூர் மக்கள் கலை இலக்கியக் கழகம் தட்டிப் பிரச்சாரம் மேற்கொண்டது. கொலைக்கு காரணமாக இருந்த பழமலை, கேடி காமராஜ் ஆகியோரையும், உடந்தையாக இருந்த தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்களையும் கைது செய்யக் கோரி தட்டியில் முழக்கம் எழுதப்பட்டது. இதைத் தொடர்ந்து பகுதி கவுன்சிலர் அண்ணாத்துரை மற்றும் காய்கறிக் கடை மணி ஆகிய இருவரின் தலைமையில் தி.மு.க. கொடி பறந்த கார்களில் - வந்த கும்பல் தட்டிகளைத் திருடிச் சென்றது. மேலும் அமைப்புத் தோழர்கள் வீட்டை தேடிப்பிடித்து மிரட்டி வருகிறது. இதுவல்லாமல் இக்கும்பலும் போலீசும் சேர்ந்து கடலூர், புதுநகர் பகுதிகளில் உள்ள அனைத்து 'நக்கீரன்' பத்திரிகையையும் வாங்கும் முயற்சியில் பரிதாபமாக இறங்கியது. இச்செயல்கள் கொலைக் குற்றவாளிகளை மேலும் ஆதாரப்பூர்வமாக அம்பலப் படுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்து மதவெறி காட்டுத் தீபோல் பரவுகிறது. ஹைதராபாத், அலிகர், கான்பூர், அகமதாபாத், அயோத்தி... போலீசு, ராணுவம், மதவெறியர்கள் கையில் சிவில் நிர்வாகம். முடிவில்லாமல் ஊரடங்கு, துப்பாக்கி சூடு. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வீடுகள் - கடைகள் தகர்ப்பு. தீ வைப்பு, போக்குவரத்து நிலைகுலைவு எங்கும் பீதி, மரண ஓலம். அறிவிக்கப்படாத உள்நாட்டு போர்.

சூலாயுதம், வெட்டறிவாள், வெடிகுண்டு... கொலை ஆயுதங்களுடன் இந்துமதவெறி கும்பல்கள். தாடியும், குல்லாயும் கொலைக்கு போதுமான காரணங்கள். 'வெட்டு, வெட்டு' வெறி கூச்சல்! நடந்து சென்ற முஸ்லீம் முதியவர் ரத்த வெள்ளத்தில் மிதக்கும் காட்சி! சந்தேகம்! 'முஸ்லீமாக இருப்பானோ' பிறப்புக் குறியை உறுதி செய்ய அங்கேயே, நிர்வாணம்! 'சுன்னத்!' காட்டுக் கூச்சல், எக்காளம்! 'அறுத்தெறி, அறுத்தெறி!' அதோ... அவள் துளுக்கச்சிதான்... ஏளனம், நக்கல்! வெறியோடு ஒருவன், ''அவள் எனக்கு''.

வாகனங்களில்... ஒரு கையில் காவிக்கொடி, மறுகையில் குரூர ஆயுதங்கள். கொலைவெறி தூண்டும் கோஷங்கள். போலீசு, ராணுவம் வேடிக்கை பார்க்கிறது. முஸ்லீம்கள் குடும்பம் குடும்பமாக நரபலி! 'அயோத்தி பிரச்சனைக்கும் ஹைதராபாத் ஏழை முஸ்லீமுக்கும் என்ன சம்மந்தம்?' 'கேள்வி கேட்காதே.... ஆபத்து' வா... வா



கிழிந்து போனது எது? முகமா? மதங்களின் மனிதநேயமா?



இதில் யார் மு

# மதவெ

மூக்கு - உதடு அறுத்தெறியப்பட்ட மூ




www.padippakam.com

போகலாம்... பரபரப்பு, அச்சம், பீதி! எங்கும், இறந்து விட்ட உடல்கள்! நடமாடும் உடல்கள்! மனிதத் தன்மையை அரித்து தின்னும் மதவெறி பயங்கரம்! ராமனோ, அல்லாவோ நரபலி கேட்டார்களா? ரத்த அபிஷேகம் நடப்பது யாருக்காக?

ரத்தத்தை உறைய வைக்கும் குரூரங்கள்! ஊரடங்கு தளர்த்தப்படாத அலிகர் நகரம். மக்கள் பல நாட்கள் பட்டினி! பயந்து பயந்து வெளியே வரும் முஸ்லீம் முதியவர். கண்களில் மிரட்சி! 'சீக்கிரம் வீட்டுக்கு திரும்பிவிட வேண்டும்' தளர்ந்த உடலில், வாழும் ஆசை! எதிரே...! ஒரு கொலை கும்பல்...! உயிருள்ள ஒரு மனிதனை விறகுபோல் பிளக்கிறது! அடுத்த அடியை எடுத்து வைக்க தெம்பில்லை! அதிர்ச்சியில்... முதியவர் பிணமானார்!

ஹைதராபாத்... பழைய நகரம்! ஏழை முஸ்லீம். வீட்டில் கதவு கூட இல்லை. மண் தரையில் சுருண்டு கிடக்கும் குழந்தை. அணைத்தபடி தூங்கும் தாய். திபுதிபு என சத்தம். சுதாரித்து எழுவதற்குள்... குழந்தை ரத்த வெள்ளத்தில் தலையில்லாமல்! அந்த நகரத்தின் இன்னொரு மூலை. வயதான மூதாட்டி பேரக்குழந்தைகளை பார்க்கப் போகும் ஆசை, அவசரம் 'கலவரம் நம்மை என்ன



யார் இந்து?

# நரபலி

தவெறி - மிருகத்தனம் - வேறு வேறா?

விறகுகளா? மனித உடல்களா? ரத்த அபிஷேகம் யாருக்கு?



செய்து விட போகிறது?' 'மதவெறியர்களிடம் மனித நேயம் இருக்கும்?' குருட்டு நம்பிக்கை. ஆனால்... சருகு போன்ற மூதாட்டியை மறித்தது கொலைக் கூட்டம். நடுநடுங்கிய அவரின் மூக்கையும், உதட்டையும் கொத்தாகப் பிடித்து அறுத்து கெக்கலித்தது.


எங்கும் பேயாட்டம்! சாலையில், எரியும் வீட்டில்... மருத்துவமனை வாயிலில்... கொத்துக் கொத்தாக உடல்கள்! மார்பகங்கள், மறைவிடங்கள் அறுக்கப்பட்டு... குற்றுயிராய் கேட்பாரற்று... அழுகி... அவற்றிலே எவை இந்துக்களது பிணங்கள்... எவை முஸ்லீம்களது பிணங்கள்... இறந்தபின் மதங்கள், உண்டா?... மத வேறுபாடுகள் உண்டா?...

ஆனால், அப்போதும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மதவெறியில் குளிர்காய்ந்தன அம்மணமாக! அரசு விருந்தினர் மாளிகையில் கூடி, சதி, பேரம், கும்மாளம்! எதிர்க்கோஷ்டி முதல்வரை வீழ்த்த நேரத்தைப் பயன்படுத்த குறி! வழக்கம்போல் அரசுக் கணக்குப்படி, இறந்தவர்கள், காயமுற்றவர்கள் புள்ளி விவரங்கள் வாசிக்கப்பட்டன. பிறகு அவை அதிகார வர்க்கத்தால் பரண்மேல் போடப்பட்டது.

இந்து மதம் - முஸ்லீம் மதம் எதுவாயினும் மனித நேயம், நல்லிணக்கம் சகிப்பு தன்மை ஆகியவற்றையே போதிப்பதாக மீண்டும் பிரசங்கம்! ரத்தவாடை அடிக்கும் சூலாயுதம் மறைக்கப்பட்டது காவி உடையில்! வெட்டரிவாள் மறைக்கப்பட்டது லுங்கி வேட்டியினுள்! அரசு மீண்டும் மத ஒற்றுமை பேசுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# விலைபோகும் நீதித்துறை

போபர்ஸ் கொள்ளைக்கான ஆதாரங்களைக் குழிதோண்டிப் புதைத்து விட்டதாக பாசிச ராஜீவ் கும்பல் கனவு காணும் நேரத்தில் மீண்டும் போபர்ஸ் பூதம் கிளம்பி அதனை அச்சுறுத்துகிறது. இப்போது புதிய ஆதாரங்கள் வெளிவரத் துவங்கியதும் அதை அமுக்கும், அழிக்கும் சதிவேலைகள் மீண்டும் அரங்கேறிவிட்டன. இம்முறை இந்திய நீதித்துறையே அந்த அயோக்கியத்தனத்தைச் செய்யத் துணிந்து விட்டது. ஆளும் வர்க்க அறிஞர்களே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு இந்திய நீதித்துறை வரலாற்றிலேயே இதுவரை காணாத கேலிக்கூத்தாக நடந்துள்ளது.

கடந்த நவம்பர் மத்தியில் போபர்ஸ் ஊழலில் சிக்கியுள்ள பீதியில் ராஜீவ் - இந்துஜா கும்பல் சௌத்ரி என்ற பினாமி வக்கீல் மூலம் டெல்லி உயர்நீதி மன்றத்தில் ''பொது நலன்'' வழக்கொன்றைத் தொடுத்தது. அதில் புலனாய்வுத் துறை பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையையும், அதன் புலன் விசாரணையையும் ரத்து செய்யுமாறு கோரியது.

### ஆரம்பத்திலேயே அழுகுணி ஆட்டம்

புலனாய்வுத் துறையின் முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யுமாறு போடப்பட்ட பொது நலன் மனுவை டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி சாவ்லா, டிசம்பர் முதல் வாரத்தில், விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். நீதிபதி சாவ்லா, பரம்பரை காங்கிரசு விசுவாசி. அவர் நீதிபதியாவதற்கு முன் காங்கிரசு கட்சியின் ஊழியராகச் செயல்பட்டவர். அவரது தந்தை பாசிச இந்திராவின் அவசர நிலை ஆட்சியின் போது காங்கிரசு கட்சியின் சட்ட ஆலோசனைக் குழுத் தலைவராகச் செயல்பட்டார். எனவே கூடுதல் அக்கறையோடும் பரம்பரை விசுவாசத்தோடும் விசாரணையை நடத்தினார் நீதிபதி சாவ்லா.

நீதிபதி சாவ்லாவுக்கு ஜனவரி 5ம் தேதியோடு பதவிக் காலம் முடிகிறது. டிசம்பர் 21ம் தேதிக்குப் பிறகு விடுமுறை காரணமாக கோர்ட்டுகள் இயங்காது. எனவே, அதற்கு முன்பாகவே வழக்கை முடிக்க அதீத வேகமும், அக்கறையும் காட்டினார். அன்றாடம் அவர் ஆஜராகி விசாரிக்க வேண்டிய வேறுபல வழக்குகள் இருக்கும்போது அவற்றுக்கு ஆஜராகாமல் தள்ளி வைத்துவிட்டு, இந்தக் குறிப்பிட்ட வழக்கை மட்டும் எடுத்துக் கொண்டு தினமும் ஆஜரானார் நீதிபதி சாவ்லா. கொத்தடிமைகள், குழந்தை உழைப்பு என்று சமூகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றியவைதான் பொதுநலன் வழக்குகளாக கருதப்பட்டு வந்தது. இப்போது அந்த மரபையும் மீறி கொள்ளையர்களின் நலனுக்காகப் போடப்பட்ட இந்த பொதுநலன் வழக்கையும் வெட்கமின்றி அங்கீகரித்து விசாரணை நடத்தினார் நீதிபதி சாவ்லா.

பொதுநலன் வழக்கைத் தொடுத்துள்ள ஹரிந்தர் சிங் சௌத்ரி டெல்லி செசன்ஸ் கோர்ட்டில் சிறிய திருட்டு - கிரிமினல் வழக்குகளை நடத்தி வரும் ஒரு சாதாரண வக்கீல். இவர் தனக்கும் இந்துஜாவுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று இந்த வக்கீல் கூறினாலும், சுவிஸ் கோர்ட் தீர்ப்பின் ஆவண நகல் இவருக்கு எப்படிக் கிடைத்தது? அவர் கோர்ட்டில் சமர்ப்பித்த ஆவணத்தில் இந்துஜாவின் பெயர் நீக்கப்பட்டதன் காரணம் என்ன? சுவிஸ் கோர்ட்டில் இந்துஜாவின் பெயர் அடிபட்டால் பிரச்சினையில்லை; ஆனால், டெல்லி பகிரங்க கோர்ட்டில் வெளிப்பட்டால், தானும் போபர்ஸ் வழக்கில் சந்தேகத்திற்குரிய நபர் என்று அம்பலமாகிவிடும் என்ற முன்னெச்சரிக்கையுடன் ராஜீவ் - இந்துஜா கும்பல் இந்த தகிடுதத்தத்தைச் செய்துள்ளது. இவ்வாறு செய்வதே சட்ட விரோதம்; போர்ஜரி. இதன்படியே நீதிபதி இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து மனுதாரர் மீது போர்ஜரி குற்றம்சாட்டி தண்டித்திருக்க வேண்டும்.

சௌத்ரி தொடுத்துள்ள வழக்கின் அடிப்படையில் தகவல்களைத் திரட்டி விளக்கமளிக்க மத்திய புலனாய்வுத் துறை 15 நாட்கள் அவகாசம் கேட்டது. அதற்குள் தமது பதவிக்காலம் முடிந்து விடும் என்பதால் அந்த கோரிக்கையை ஏற்க மறுத்து இன்னும் இரண்டே நாளில் விசாரணைக்குத் தயாராகும்படி உத்தரவிட்டார் சாவ்லா.

### விசுவாசி நடத்திய விசாரணை நாடகம்

இதற்கிடையே வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்து ராஜீவ் தயவில் சந்திரசேகர் கும்பல் ஆட்சிக்கு வந்தது. உடனேயே போபர்ஸ் ஊழல் புகார்களை விசாரித்து வந்த அதிகாரிகளும் அரசு உயர் வக்கீல்களும் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு விசுவாசிகள் நியமிக்கப்பட்டனர்.

போபர்ஸ் விசாரணையை சந்திரசேகர் அரசு முடக்கிவிட முயற்சிப்பதாகக் கருதிய ஜனதாதளம், பாரதீய ஜனதா, போலிக் கம்யூனிஸ்டுகள், ''இந்து'' இணையாசிரியர் என்.ராம் மற்றும் வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஆகியோர் இவ்வழக்கில் தங்களையும் ஒரு தரப்பாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வழக்கில் தலையிடுவதற்கான சிறப்பு மனுவைத் தாக்கல் செய்தனர். அந்த மனுவை ஏற்பது அல்லது மறுப்பது பற்றி முடிவு எதுவும் கூறாமலேயே விசாரணையை நடத்தினார் சாவ்லா. அரசு உயர் வழக்கறிஞர் துளசி, இந்துஜா கும்பலுக்குச் சாதகமாக அரசு தரப்பையே தோற்கடிக்கும் வகையில் வாதிடக் கிளம்பினார். ''முந்தைய வி.பி.சிங் அரசு தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அடிப்படையிலேயே ஆதாரமற்றது. அரசியல் கட்சிகள் நீதித்துறையை கேடாகப் பயன்படுத்துகின்றன'' என்று அரசுத் தரப்புக்கே எதிராக நின்று வாதிட்டார். நீதிபதி சாவ்லா இந்த அயோக்கியத் தனத்தை அங்கீகரித்து ஒத்தூதினார்.

டிசம்பர் 5ந் தேதியன்று நடந்த விசாரணை பின்வருமாறு அமைந்திருந்தது.

**துளசி:** *அரசியல் கட்சிகள் நீதித்துறையைக் கேடாகப் பயன்படுத்துகின்றன.*

**வழக்கறிஞர் லேகி** (எதிர்க் கட்சிகளின் சார்பாக வாதாடும் வக்கீல்): *போபர்ஸ் கொள்ளையில் சந்தேகத்திற்குரிய முதல் நபரான இந்துஜாவின் வழக்கறிஞரான ஜி.ராமசாமியிடம் இந்த அரசு வக்கீல் வழிகாட்டுதலைப் பெற்று வாதாடுகிறார்.*

**நீதிபதி சாவ்லா** (ஆத்திரத்துடன்): *வாயை மூடு!*

நீதித்துறையின் யோக்கியதையை கேலிக்கூத்தாக்கும் வகையில் இந்த பாணியில்தான் விசாரணை நடந்தது. அடுத்த நாள், புலனாய்வுத் துறை தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக வாதிடக் கிளம்பினார் துளசி. ஓராண்டு காலம் சிரமப்பட்டு சேகரித்த தகவல்கள் மீது சந்தேகத்தை எழுப்புவதைக் கண்டு புலனாய்வுத் துறை



படிப்பகம்

www.padippakam.com

இணை இயக்குனர் மாதவன் தன்னைப் பேச அனுமதிக்குமாறு கோரினார்.

*மாதவன்: கோர்ட்டில் நேரடியாகப் பேச என்னை அனுமதிக்குமாறு கோருகிறேன்.*

*நீதிபதி சாவ்லா: உங்களுக்கென வழக்கறிஞர் இல்லையா? அரசுத்துறை வழக்கறிஞர்கள் உள்ளார்கள். அவர்கள் மூலமாக உங்கள் கருத்தைக் கூறுங்கள்.*

*மாதவன்: அரசுத் துறை வழக்கறிஞர் பற்றித்தான் பேச விரும்புகிறேன்.*

*சாவ்லா (கோர்ட்டை விட்டு வெளியேறிக்கொண்டே): முடியாது; இதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது.*

இவ்வாறு எதிர்தரப்பு வாதத்தை கேட்காமலேயே அவசர 'நீதி' வழங்கினார் சாவ்லா.

இவ்வளவுக்குப் பின்னரும் சட்டம்-நீதித்துறை மந்திரியான சுப்பிரமணிய சாமி, துளசியின் விசாரணை திருப்திகரமாக இருந்தது என்று பாராட்டினார். புலனாய்வுத் துறை இயக்குனர் மாதவன் கோர்ட்டில் பொறுப்பின்றி நடந்து கொண்டதாக குற்றம் சாட்டினார்.

கொள்ளையர்களுக்கு ஆதரவாக அரசும் மந்திரியும் அளித்த ஊக்கத்தில் நீதிபதி சாவ்லா எல்லை மீறி குதிக்கத் தொடங்கினார். விசாரணையை முடக்க ''எனது உயிருக்கு ஆபத்து'' என்ற குண்டைத் தூக்கிப் போட்டார். டிசம்பர் 10ந் தேதியன்று நடந்த விசாரணையின் போது,

*நீதிபதி சாவ்லா (ஜனதாதள வழக்கறிஞர் பிரசாந்த் பூஷணை நோக்கி): நீயும் உனது கூட்டாளிகளும் என்னைக் கொன்று விடப் போவதாக டெலிபோனில் மிரட்டுவதை நிறுத்துங்கள்.*

*பிரசாந்த் பூஷன்: இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். என்னைப் பற்றி அவதூறாகப் பேசுவது அபத்தமானது.*

*நீதிபதி சாவ்லா: இப்போது அதைப் பற்றி என்னால் பேச முடியாது; எனது உயிரைப் பற்றித்தான் பேச முடியும். (கோர்ட்டை தள்ளி வைத்து விட்டு வெளியேறுகிறார்)*

### சாவ்லாவின் சதிராட்டம்!

இந்த திசையில் விசாரணையை இழுத்துச் சென்று வழக்கை முடமாக்கத் துடிக்கும் சாவ்லாவின் போக்கைக் கண்டித்து டிசம்.11 அன்று பிரபல முதுநிலை வழக்கறிஞர் ராம் ஜெத் மலானி வாதிட்டார். ''நீங்கள், நியாய மற்ற முறையில் நடக்கிறீர்கள். நீதியின் பொருட்டு தயவுசெய்து நீங்கள் இந்த வழக்கைத் தொடர வேண்டாம் என்று வேண்டுகிறேன்'' என்றார். உடனே, ''முதுநிலை வழக்கறிஞரே என்னை அவமானப்படுத்தி விட்டதால் நான் இந்த வழக்கைத் தொடர மாட்டேன்'' என்று நீதிபதி சாவ்லா வழக்கு கோப்புகளை மேசையின் மீது கோபமாக வீசியெறிந்து விட்டு வெளியேறினார்.

பின்னர் அடுத்த நாளே பல்டி அடித்து, ''நான் இந்த வழக்கை விசாரிக்காமல் புறக்கணித்தால் அதனால் அபாயகரமான விளைவுகள் ஏற்படும்'' என்று கூறி திரும்பவும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். இதனால் வழக்கின் கதி என்னாவாகுமோ என்று அஞ்சிய எதிர்க்கட்சிகள் சாவ்லாவை இவ்வழக்கை விசாரிக்கும் பொறுப்பிலிருந்து நீக்குமாறு புதிய மனுவை தாக்கல் செய்தன.

மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்த போது, ''சுவிஸ் கோர்ட் உத்திரவை விசாரணைக்கு எடுப்பதா கூடாதா என்பதை நான் முடிவு செய்ய வேண்டியதில்லை. புலன் விசாரணையை ரத்து செய்யுமாறு கோரியுள்ள மனுவை மட்டுமே பரிசீலிப்பேன். அதனடிப்படையில் இறுதித் தீர்ப்பு வழங்குவேன்'' என்று சாவ்லா கொக்கரித்தார். ''எங்கள் தரப்பையும் தயவு செய்து விசாரியுங்கள். அது உங்கள் கடமை'' என்றார் எதிர்க்கட்சி வக்கீல் பிரசாந்த் பூஷன். ''முடியாது; உங்கள் தரப்பை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாது'' என்று தடலடியாக மறுத்தார், சாவ்லா.

இதற்கிடையில் தமது தரப்பையும் விசாரிக்க உத்திரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் ராம்ஜெத் மலானி ஒரு மனுவைத் தாக்கல் செய்து அதில் வெற்றியும் பெற்றார். அதன்படி மீண்டும் தமது தரப்பையும் விசாரிக்குமாறு எதிர்க்கட்சி வழக்கறிஞர்கள் கோரினார். ஆனாலும், நீதிபதி சாவ்லா ஏற்க முடியாது என்று மறுத்தார். இந்த வழக்கில் தலையிடுவதற்காக எதிர்க்கட்சிகள் தொடுத்த சிறப்பு மனுக்கள் அனைத்தையும் நிராகரிப்பதாக திமிராக உத்திரவிட்டார். இது அநீதியானது என்று வக்கீல்கள் முறையிட்டபோது மேசையை ஆத்திரத்தோடு பலமாகத் தட்டி சாவ்லா கூச்சலிட்டார். இதோடு, இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்று எதிர்க்கட்சிகள் தொடுத்த சிறப்பு மனுவையும் நிராகரிப்பதாக உத்திரவிட்டார்.

### ''நானே ராஜா! நானே மந்திரி!''

இதன் பிறகு டிசம்பர் 19 அன்று புலனாய்வுத் துறையின் விசாரணையை ரத்து செய்யக் கோரி தொடரப்பட்ட ''பொது நலன்'' வழக்கு உட்பட அனைத்து மனுக்களையும் ஏற்க முடியாது என்று தள்ளுபடி செய்தார். பின்னர் தன்னையே மனுதாரராக நியமித்துக் கொண்டு, புலனாய்வுத் துறையின் மீதும் முதல் தகவல் அறிக்கையின் மீதும் குற்றம் சாட்டி, இதை புதிய வழக்காகக் கருதி விசாரணை நடத்துமாறு கோரினார். அதாவது தானே வழக்கு தொடுத்து தன்னையே அதற்கு வக்கீலாகவும், நீதிபதியாகவும், சட்டம் நிறைவேற்றுபவராகவும் நியமித்துக் கொண்டார். முதல் தகவல் அறிக்கையின் சில பிரிவுகளைக் காட்டி, 6 வகையான முறைகேடுகள் - குற்றங்கள் செய்துள்ளதாக் கூறி குற்றவியல் சட்டப்படி தீர்ப்பளிப்பதாக நியாயப்படுத்தினார்; இதன்படி 'போதுமான அளவுக்கு புலன்விசாரணை நடத்தாமல் வழக்கு பதிவு செய்தது தவறு. அதை சிறப்பு கோர்ட்டு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது சட்டவிரோதமானது. மத்திய புலனாய்வுத் துறை, விசாரணைக்கு நியமிக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்பு அல்ல. புலன் விசாரணையில் அன்னிய சக்திகளின் தலையீடு உள்ளது. அதன் செயல்பாடுகள் சந்தேகத்திற்குரியவை. எனவே, போபர்ஸ் தொடர்பான அனைத்து வழக்குகளையும் ஏன் ரத்து செய்யக் கூடாது' என்று கேட்டு மத்திய அரசுக்கும், புலனாய்வு துறைக்கும் விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்ப உத்திரவிட்டார்.

**போபார்ஸ் கொள்ளையர்களுக்காக நீதியை வளைத்த 'நீதி'பதி சாவ்லா.**



நீதி மன்றங்களில் புதிதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டால், அது தலைமை நீதிபதியின் பார்வைக்கு வந்து அவரது அனுமதிக்குப் பிறகே குறிப்பிட்ட நீதிபதியிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்படும். அதன் பிறகே அந்த நீதிபதி விசாரணை நடத்த முடியும். ஆனால், நீதிபதி சாவ்லா இவையனைத்தையும் துச்சமாக மதித்து புதிய வழக்கைத் தானே தீர்மானித்துக் கொண்டு தானே நீதிபதியாக மாறி அடுத்த 15வது நிமிடத்தில் விசாரணை நடத்தி தீர்ப்பையும் சொல்லி விட்டார். இந்திய நீதித்துறை வரலாற்றில் இதைவிட கேலிக்கூத்து நடந்திருக்கவே முடியாது. பாசிசக் காட்டுமிராண்டிகளின் ஆட்சியில் வைத்ததுதான் சட்டம், நீதி என்பது மீண்டும் நிரூபணமாகிவிட்டது.

சாவ்லாவின் அடாவடித்தனத்தைக் தொடர்ந்து எதிர்த்தரப்பு வக்கீல்களும் பத்திரிக்கைகளும் இந்தியத் தலைமை நீதிபதியை இதில் தலையிடுமாறு ஒப்பாரி வைத்தன. அதன்பிறகு இப்போது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரங்கனாத் மிஸ்ரா தலைமையிலான நீதிபதிகள் குழு, சாவ்லாவின் உத்திரவை ரத்த செய்து, அவர் நடத்திய விசாரணையைத் தொடராமல் நிறுத்தி வைக்க உத்திரவிட்டுள்ளது. இதைக் காட்டி உலக நாடுகளிடம் இந்திய நீதித் துறையின் மானம் கப்பலேறுமுன் அதைக் காப்பாற்றி விட்டதாக தலைமை நீதிபதியை முதலாளித்துவ அறிஞர்கள் பாராட்டுகின்றனர். அதோடு எந்த கீழ் கோர்ட்டிலும் போபர்ஸ் தொடர்பான எந்த விசாரணையும் நடக்காமல் தடுக்குமாறும் கோருகின்றனர். இதன்மூலம் நியாயமான நீதி கிடைத்துவிடும் என்ற மாயையை ஊட்டுகின்றனர்.

ஆனால், 'இந்தியக் கோர்ட்டிலேயே புலன் விசாரணையை நம்பவில்லை; அதற்கெதிராக அரசு உயர் வக்கீலே குற்றம் சாட்டியுள்ளார். நீதிபதியே புலனாய்வைச் சந்தேகிக்கிறார்' என்று கூறி சுவிஸ் கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கை கொள்ளையர்கள் நீர்த்துப் போகச் செய்ய முடியும். அதன் மூலம் எந்த உண்மையும் வெளிவராமல் போபார்ஸ் ஊழலைக் குழிதோண்டிப் புதைத்துவிட முடியும். இந்த நோக்கத்தோடுதான் பாசிச ராஜீவ் - இந்துஜா கும்பலும் அதன் நீதித்துறை எடுபிடி சாவ்லாவும் செயல்பட்டுள்ளனர்.

● பாலன்

படிப்பகம்

www.padippakam.com

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அவதூறுகளையே விமர்சனங்களாக்கும் வீரமணி கும்பல்

## திராவிட இயக்கப் பாரம்பரியம் உண்மையும் பொய்யும்

மார்க்ஸ், லெனின் பற்றி விலாவரியாக ஆபாசமாய் எழுதியதாக 'உண்மை' ஏட்டின் மீது குற்றம் சுமத்தியிருந்தது புதிய ஜனநாயகம். இதற்கு எதிராக கருணாநிதி பற்றி புதிய ஜனநாயகம் எழுதிய ஒரு வாசகத்தைச் சுட்டிக்காட்டி புதிய ஜனநாயகம்தான் விலாவரியாக எழுதுவதாக எதிர்க் குற்றச்சாட்டை வீசுகிறது 'உண்மை' ஏடு.

விபச்சாரத்தை ஒழிப்பதாகக் கூறுவதற்குக் கருணாநிதிக்கு எவ்வித அருகதையும் கிடையாது என்பதைச் சுட்டிக்காட்ட கண்ணதாசனின் வனவாசம் நூலை ஆதாரமாகக் கொண்டு புதிய ஜனநாயகம் எழுதியது. ''எந்தக் கருணாநிதி? விபச்சாரியிடம் சென்றுவிட்டு, பின் நீ நடந்து கொண்ட விதம் சரியில்லை, எனவே பணத்தைத் திருப்பித்தா எனக் கழுத்தில் துண்டைப் போட்டு வசூலிக்கப்போன அந்தக் கருணாநிதிதான்'' என்ற இந்த வாசகம் கருணாநிதியைப் பற்றி 'விலாவரியாக' ஆபாசமாக கதை 'அளப்பது', இது விமர்சனமாகாது என்கிறது 'உண்மை' ஏடு.

மிகவும் கட்டுப்பாடாக அதேசமயம் விபச்சாரம் பற்றிய கருணாநிதியின் இரட்டை வேடம் பற்றி எழுதினோம். இது ஆபாசம் என்றால், நிர்வாணப் பெண்ணின் நிழற்பட அட்டை போட்டு 'கோவில்கள் தோன்றியது ஏன்?' என்ற வீரமணியின் நூல் விற்கப்படுகிறதே அது எந்த வகை? வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று ''ஏ'' பட்டிமன்றம் நடத்துகிறதே, வீரமணி கும்பல் அது எந்த வகை? அண்ணாதுரை, கருணாநிதி போன்ற தலைவர்களின் இயக்க நூல்களில் உள்ள வர்ணனைகள் எந்த வகை? இப்போதும் சங்கர் - பொன்னர், பாயும் புலி பண்டாரக வன்னியன், ரோமாபுரிப் பாண்டியன் என்கிற பெயரில் கருணாநிதி நடத்தும் இலக்கிய விபச்சாரம் எந்த வகை? வண்ணத்திரை, குங்குமம், குங்குமச் சிமிழ், சுமங்கலி (பெயர்களைப் பாருங்கள்!) என்று சங்கிலித் தொடர் மூலம் கருணாநிதி குடும்பம் நடத்தும் எழுத்து விபச்சாரம் எந்த வகை?

**திராவிடக் கழகம் - நீதிக்கட்சியின் சாதனை எனப்படும் 1927-47 இட ஒதுக்கீட்டின்படி 43% பல்வேறு வெள்ளாள சாதிகள், ரெட்டி, நாயுடு ஆகிய முற்பட்ட சாதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு வந்த இட ஒதுக்கீட்டிலும் 250க்கும் மேற்பட்ட சாதிகளிலும் 11.7% மக்கள்தொகையே உள்ள 9 சாதிகள் மட்டும் 37.3% அரசு பதிவு பெறாத பதவிகளிலும், 48.2% அரசு பதிவு பெற்ற பதவிகளிலும் ஆதிக்கம் பெற்றன. ஆக தி.க., தி.மு.க. இயக்கங்கள் பார்ப்பனரல்லாத மேல்சாதிகளின் நலன்களுக்காகவே பாடுபடுகின்றன என்கிறது மண்டல் கமிசன் அறிக்கை.**






''குடிகாரர் கண்ணதாசனுடைய ஆதாரத்தை எடுத்துப் போட்டிருப்பது விமர்சனமா?'' என்று கேட்கிறது 'உண்மை' ஏடு.

கண்ணதாசன் திராவிட இயக்கத்தவராக இருந்தபோதும் தான் 'குடிகாரர்'. அப்போது மட்டும் 'உண்மை' ஏட்டார் ஏற்றுக் கொண்டிருக்கவில்லையா? மேலும் அங்கே பலர் குடித்தால்தான் மேடை ஏறிப் பேசவும் எழுதவும் முடிகிறது; குடி போதையில்தான் அவர்கள் ஏதாவது உண்மையே பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். கண்ணதாசனின் கூற்றைக் கருணாநிதியே மறுக்கத் துணியாதபோது, 'எஜமானனைவிட விசுவாசமான ஊழியராக' 'உண்மை' ஏடு நடந்து கொள்ளுகிறது.

பேச்சிலும், எழுத்திலும் பொய் புனைவதிலும் உண்மைகளை திரிப்பதிலும் கண்ணதாசன் பார்ப்பன காங்கிரஸ் கலாச்சாரவாதியாக விளங்கியவர்; எனவே அவரின் தகவல்களை அப்படியே நம்பக்கூடாது என்கிறது 'உண்மை' ஏடு. தேவையானபோது, வசதிக்கேற்ப பார்ப்பன எழுத்தாளர்களை ஆதாரமாக வைத்து 'உண்மை', 'விடுதலை' எழுதுவதில்லையா? 'பார்ப்பன நண்பரே படப்பிடிப்பு' என்று போடுவதில்லையா? யார் எழுதுகிறார்கள் என்பதற்காக மட்டுமே ஒரு தகவலை நிராகரித்துவிட முடியுமா? மேலும் இவ்விவகாரத்தில் கண்ணதாசனின் கருத்தை நம்பவே இடமுண்டு!

''என் மகள் கனிமொழியின் தாய்'' என்று தர்மாம்பாள் குறித்து கருணாநிதி சொல்ல வேண்டி வந்ததை எண்ணிப் பாருங்கள். மீண்டும் முதல்வரான பிறகு தானே மனைவி என்று கூறிக் கொள்கிறார். ''கருணாநிதியின் எதிரி'', ''இனத்துரோகி எம்.ஜி.ஆர்.'' கொடுத்த தகவல் என்று சொல்லி இதை நிராகரிப்பதோ, நியாயப்படுத்துவதோ சரியாகுமோ? 'ஒருவனுக்கு ஒருத்தி' என்று திராவிட இயக்கம் முழங்கி வந்த பண்பாடு என்ன ஆனது?

எம்.ஜி.ஆரைப் பற்றி பொதுக்கூட்டங்களில் கண்டபடி பேசியவர்; ஜெயகாந்தன் எழுதிய 'சினிமாவுக்குப் போன சித்தாளு' என்ற எம்.ஜி.ஆர். பற்றிய ஆபாசக் கதையைத் தனது பத்திரிகையில் வெளியிட்டவர்; 'ஆஸ்தான கவிஞர்' பதவி கொடுத்தபின் அவரைப் புகழ்ந்தவர் கண்ணதாசன். எனவே அவரின் தகவல்களை அப்படியே நம்பக் கூடாது என்கிறது 'உண்மை' ஏடு.

இதற்காக நம்பக் கூடாது என்றால் பெரியார் உட்பட திராவிடத் தலைவர் எவரையுமே நம்ப முடியாது! தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் உட்பட பலர் எம்.ஜி.ஆரோடு சேர்ந்து கருணாநிதியை ஏசிவிட்டுத் திரும்பியவர்கள். எம்.ஜி.ஆர். ஒரு பாசிஸ்டு, சேடிஸ்டு, கோமாளி என்று கூறி வந்த கருணாநிதியே இப்போது 40 ஆண்டு கால நண்பர் என்கிறார். 'அரசியலில் நிரந்தர நண்பனும் கிடையாது, எதிரியும் கிடையாது' என்கிற தத்துவத்தை உருவாக்கியதே திராவிட இயக்கம்தான்!

எம்.ஜி.ஆர். ஆட்சியின் இறுதி ஆண்டில் வீரமணி எடுத்த ஆதரவு நிலையோடு அதற்கு முன்பு 'உண்மை'யும் 'விடுதலை'

படிப்பகம்

www.padippakam.com

யும் எழுதியதையும், வீரமணி பேசியதையும் எடுத்துப் பாருங்கள் - சந்தர்ப்பவாத சாகசங்கள் புரியும்! பெரியாரைப் பாசிஸ்டு என்று ஏசிய அண்ணாதுரை, கருணாநிதி முதலியவர்கள் பிறகு தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

தன்னிடம் பண மோசடி செய்தவர்கள்; தன் பெயரால் கள்ளக் கையெழுத்து - கள்ள அறிக்கை (ஃபோர்ஜரி) செய்தவர்கள்; தன்னிடமே பணம் வாங்கி அச்சகம் அமைத்துத் தன்னையே ஏசியவர்கள்; தன்னையே கொல்ல சதி செய்தவர்கள் என்று அண்ணாத்துரை முதலியோர் மீது புகார் எழுதிய பெரியார், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் ''தமிழராட்சி'' என்று ஏற்றுக் கொண்டார்.

ஆகவே 'உண்மை' ஏடு கூறும் காரணத்துக்காக கண்ணதாசனின் தகவல்களை அப்படியே நம்பாமலும் இருக்க முடியாது.

பின்வருமாறு புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது. ''மார்க்ஸ் - ஜென்னி உறவைக் கேவலப் படுத்துவதற்காக இவ்வளவு வக்கிரமாக எழுதுகிறது 'உண்மை'. 3, 5 பெண்டாட்டிகளை வைத்துக் கொண்டிருப்பது, விபச்சாரிகளின் வீடே கதியாகக் கிடப்பது, 70 வயதுக்குப் பிறகும் வேறு பெண்டாட்டிகள் உள்ள போதே புதிதாகத் திருமணம் செய்து கொள்வது — இது 'திராவிடப் பாரம்பரியம்' 'பேசுபவர்களின் வாழ்க்கை!''

புதிய ஜனநாயகத்தின் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க வக்கற்ற 'உண்மை' ஏடு இதையே விலாவரியான ஆபாசமான வாதம் என்று முத்திரை குத்துகிறது. இதில் என்ன ஆபாசம் இருக்கிறது என்பதை வாசகர்களே முடிவு செய்யட்டும்.

அப்புறம் புதிய ஜனநாயகம் எழுதாததை பார்ப்பன பாணியில் 'உண்மை'க்காரர்களே பொய்யாக எழுதி குதர்க்கமான எதிர்க் கேள்வி எழுப்பி மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து நழுவிக் கொள்ள முயன்றுள்ளனர்.

''தோழர் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட உலகில் — பல நாடுகளில், பல கம்யூனிஸ்டு தலைவர்களின் ஒழுக்கக் கேடுகளை (உதாரணம்: ருமேனியாவில் சுட்டுக் கொல்லப்பட்ட சௌசெஸ்கோவின் செயல்கள்) பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இந்தியாவில் மட்டும் சுமார் 35. கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன. அதுவும் புதிய ஜனநாயகம் ''போலி கம்யூனிஸ்டுகள்'' என்று பலரை பல்வேறு ஆதாரங்களுடன், அவர்களது ஒழுக்கக் கேடுகளை வரிசைப் படுத்தியுள்ளது. இது போன்று கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்களின் ஒழுக்கக் கேடுகளை வரிசைப்படுத்தி இதுதான் 'மார்க்சியப் பாரம்பரியமா?' என்று 'உண்மை' ஏட்டில் எழுதினால், அது சரியாகுமா? தோழர்கள் மார்க்ஸ், லெனின், எங்கல்ஸ் போன்றோர் இந்த ஒழுக்கக் கேடுகளுக்கு பொறுப்பாவார்களா?'' என்று 'உண்மை' ஏடு கேட்கிறது.

குதர்க்கமான, வெற்றுத்தனமான இக்கேள்விக்கு நமது பதில் நேரடியானது, எளிமையானது. யாரையெல்லாம் 'போலிக் கம்யூனிஸ்டுகள்', 'ஒழுக்கக் கேடர்கள்' என்

> **தன்னிடம் பணமோசடி செய்தவர்கள்; தன்பெயரால் கள்ளக் கையெழுத்து - கள்ள அறிக்கை (ஃபோர்ஜரி) தயார் செய்தவர்கள்; தன்னிடமே பணம் வாங்கி அச்சகம் அமைத்துத் தன்னையே ஏசியவர்கள்; தன்னையே கொல்ல சதி செய்தவர்கள் என்று அண்ணாத்துரை முதலியோர் மீது புகார் எழுதிய பெரியார் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் ''தமிழராட்சி'' என்று ஏற்றுக்கொண்டார்.**

றும், எவையெவை ஒழுக்கக் கேடுகள் என்றும் எப்போது பகிரங்கமாக ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி எதிர்க்கிறோமோ அப்போதே அவர்களுடைய, அச்செயல்களுடைய பாரம்பரிய உரிமையை நாம் கோரவும் இல்லை, ஏற்கவும் இல்லை, நிராகரிக்கிறோம் என்றுதானே பொருள்.

'உண்மை' ஏடு எந்தச் செயல்களையும், எந்தத் தலைவர்களது ஒழுக்கக் கேடுகளையும் வரிசைப்படுத்தி இதுதான் 'மார்க்சிய பாரம்பரியமா? என்று எழுதிக் கொள்ளலாம். ஆனால் எந்தச் செயல்களுக்கும், எந்தத் தலைவர்களுக்கும் நாம் பாரம்பரிய உரிமை கொண்டாடுகிறோமோ அதற்காக, அவர்களுக்குத்தான் நாம் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். நாங்களே ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி எதிர்த்து வரும் செயல்களுக்காகவும் தலைவர்களுக்காகவும் பாரம்பரிய உரிமையும் கோர மாட்டோம்; அவற்றுக்குப் பதிலும் சொல்ல வேண்டியதில்லை.

'திராவிடப் பாரம்பரியம்' என்று நாம் சாடும்போது இதே விதியைத்தான் — இதுதான் பகுத்தறிவுப்படி நியாயமானது — பின்பற்றுகிறோம். நீதிக் கட்சியிலிருந்து தி.க., தி.மு.க., அ.தி.மு.க. (எம்.ஜி.ஆர்.) வரை திராவிட இயக்கத்தின் எந்தெந்தச் செயல்களை எந்தெந்தத் தலைவர்களின் ஒழுக்கக் கேடுகளை அவர்கள் அம்பலப்படுத்தி எதிர்க்கவில்லையோ, கண்டுகொள்ளாமல் இருந்து விடுகிறார்களோ, பின்னால் எவற்றுக்கெல்லாம், எந்தத் தலைவர்களையெல்லாம் பாரம்பரிய உரிமையோடு சொந்தம் கொண்டாடுகிறார்களோ அவற்றைத்தான் 'திராவிட பாரம்பரியம்' என்கிறோம்.

அதாவது சௌசெஸ்கோக்களை எப்போதுமே மார்க்சிஸ்டு - லெனினிஸ்டுகள் அம்பலப்படுத்தி எதிர்த்து வந்திருக்கும் போது அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை எப்படி மார்க்சிய - லெனினியப் பாரம்பரியமாகும்? அதேசமயம் கருணாநிதி, எம்.ஜி. ஆர். போன்றவர்களின் ஒழுக்கக்கேடுகளை திராவிட இயக்கம் கண்டுகொள்ளாமல் இருப்பது மற்றும் நியாயப்படுத்துவது என்றிருக்கும்போது, தேவையானபோது அவர்களுடன் கூடிக்குலாவும்போது அவர்களது வாழ்க்கை - செயல்களை 'திராவிடப் பாரம்பரியம்' என்று கூறுவது எப்படித் தவறாகும்?

### தி.க. இப்போது காலி பெருங்காய 'டப்பா' தான்!

தி.க. பார்ப்பனரல்லாத தனவந்தர் நலன்களுக்காகப் பாடுபடுவதை மறைப்பதற்காக 'உண்மை' ஏடு சில வாதங்களை எழுதியுள்ளது. நீதிக் கட்சியில் இருந்த தனவந்தர்கள் விலகி, அதன் பலவீனங்களை அறவே விட்டொழித்து பண்பு மாற்றமடைந்துதான் திராவிடர் கழகம்; ஊசலாட்ட மற்ற பார்ப்பன எதிர்ப்பு, இந்திய தேசிய எதிர்ப்பு, பகுத்தறிவு, பொது உரிமை, பொதுவுடமை நோக்கு, தேர்தலில் பங்கேற்காமல், தேர்தலில் நிலைப்பாடு மேற்கொள்ளல் போன்றவை நீதிக்கட்சியில் இல்லாத திராவிடர் கழகத்தில் ஏற்பட்ட கூறுகள்; அதன்பின் திராவிடர் கழகம், 'பள்ளர் கட்சி', 'பறையர் கட்சி' என்று அழைக்கப்பட்டது; பார்ப்பனரல்லாதவர்கள் கூடத் தமது பணக்கார நிலை ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை அடைந்ததும் அதைப் பாதுகாக்க பார்ப்பன அடிவருடிகளாகவும், திராவிடர் கழக எதிர்ப்பாளர்களாகவும்தான் இருந்துள்ளார்கள் - என்று 'உண்மை' ஏடு எழுதுகிறது.

இவை அனைத்தும் எப்படி உண்மைக்குப் புறம்பானவை என்பதை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். மேற்கண்ட பண்புகள் எவையுமே தி.க.வில் இப்போது கிடையாது; பெரியாரின் சுயமரியாதை இயக்க காலத்தில் இருந்த சில பண்புகள் கூட அவர் காலத்திலேயே கைவிடப்பட்டு சமரசம் செய்து கொண்டவைதாம்!

> **மிகவும் கட்டுப்பாடாக, அதேசமயம் விபச்சாரம் பற்றிய கருணாநிதியின் இரட்டை வேடம் பற்றி எழுதினோம். இது ஆபாசம் என்றால், நிர்வாணப் பெண்ணின் நிழற்பட அட்டை போட்டு 'கோவில்கள் தோன்றியது ஏன்?' என்ற வீரமணியின் நூல் விற்கப்படுகிறதே அது எந்த வகை?**



படிப்பகம்

www.padippakam.com

**ஊசலாட்டமற்ற பார்ப்பன எதிர்ப்பு என்பது உண்மையா? கிடையவே கிடை**யாது. ''நாத்திகக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் பார்ப்பனரை தி.க.வில் சேர்த்துக் கொள்வீர்களா?'' என்று சமீபப் பேட்டியில் கேட்டபோது, முடியாது, அவர் ஊடுருவித் திராவிட இயக்கத்தைக் கெடுத்து விடுவார் என்றும், ஜெயலலிதாவை உதாரணமாகவும் வீரமணி கூறியுள்ளார். இதன்மூலம் எம்.ஜி.ஆர். கட்சியும், ஆட்சியும் திராவிடப் பாரம்பரிய வகைப்பட்டது என்கிறார். ஆனால், அது எப்படி பார்ப்பன ஊழியஞ் செய்வதாய் இருந்தது என்பதை நாடறியும்.

அண்ணாத்துரைக்கு வி.பி.ராமனும் கருணாநிதிக்கு குகன், சாவியும் பெரியாருக்கு ராஜகோபாலாச்சாரியும் நெருங்கிய பார்ப்பன ஆலோசகர்கள். இவ்வளவு சவடாலடிக்கும் வீரமணிக்கு திராவிட வக்கீல்கள் மீது நம்பிக்கையின்றி இந்துஜா - அம்பானி - ராஜீவின் 'ஆஸ்தான' வக்கீலான ஜி.ராமசாமி என்ற பார்ப்பனரையே வைத்துக் கொண்டுள்ளார். இதுதான் ஊசலாட்டமற்ற பார்ப்பன எதிர்ப்பா?

**இந்திய தேசிய எதிர்ப்பு இருக்கிறதா?;** மற்ற தேசிய இனங்கள் நடத்தும் தன்னுரிமை மற்றும் புரட்சி இயக்கங்களை தி.க. ஆதரித்ததே கிடையாது! அவற்றை ஒடுக்குவதற்கு, கருணாநிதி — எம்.ஜி.ஆர் ஆட்சிகள் தமிழகப் போலீசை அனுப்பி வைத்தன. இதையும் தி.க. எதிர்க்கவில்லை. பெரியார் காலத்திலேயே திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தை தமிழ்நாடு தமிழருக்கே என்று மாற்றிய போதிலும், அதுவும் கைவிடப்பட்டது. ''விடுதலை'' ஏட்டின் முகப்பிலிருந்து அதை ஓசையின்றி நீக்கி விட்டனர். அதன்பிறகு தனிநாடு அல்லது சுயநிர்ணய உரிமை தி.க. மேடைகளில் எங்கேயும் எழுப்பியதில்லை. நெடுமாறன் கூட்டிய தன்னுரிமை மாநாடு தடை செய்யப்பட்டதும், அதைக்கண்டிக்காது, எதிர்க்கத் துணியாது கோழைத்தனமாக ஓடி ஒளிந்து கொண்டார், வீரமணி. 'விடுதலை'யிலும் அதுபற்றி ஒரு வார்த்தை கூட எழுதவில்லை. இதுதான் இந்திய தேசிய எதிர்ப்பா?

**பகுத்தறிவா?இரட்டை வேடமா?** சங்கராச்சாரி முதலிய பார்ப்பன சனாதன எதிர்ப்பு சரிதான். ஆனால் அதன் பங்காளிகளான திருப்பனந்தாள், தருமபுரம், குன்றக்குடி, மதுரை ஆதீனங்களை மடாதிபதிகளை திராவிடப் பாரம்பரியமாக ஏற்றுக் கூடிக் குலாவுகின்றனரே அது எந்த வகைப் பகுத்தறிவு?

**பொது உரிமையா? மேல்சாதி நலனா?:** தி.க.வின் பொது உரிமை என்பது வகுப்புரிமை தான்; அதாவது பார்ப்பனரல்லாத சாதியினருக்குச் சம உரிமை பெறுவது தான் என்று கூறுகின்றனர். ஆனால் இது பார்ப்பனரல்லாத மேல்சாதிகளின் நலனுக்கானதுதான் என்பதை மண்டல் கமிசனே ஒப்புக் கொண்டுள்ளது. நீதிக்கட்சி திராவிட இயக்கச் சாதனை எனப்படும் 1927-47 ஆண்டுகளில் இருந்த இட ஒதுக்கீடு என்பது பல்வேறு வெள்ளாள சாதிகள், ரெட்டி, நாயுடு ஆகிய முற்பட்ட சாதிகளுக்கு 43% இட ஒதுக்கீடு ஏற்பாடு செய்தது! தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த சாதிகள்தான் அரசு பதவிகளில் பார்ப்பனர்களைப் போலவே ஆதிக்கம் புரிந்து வந்தனர். 1954க்குப் பிறகு வந்த இட ஒதுக்கீட்டிலும் 250க்கும் மேற்பட்ட பிற்பட்ட சாதிகளிலும் 11.7% மக்கள் தொகையே இருக்கும் 9 சாதிகள் மட்டும் 37.3% அரசு பதிவு பெறாத பதவிகளிலும், 48.2% அரசு பதிவு பெற்ற பதவிகளிலும் இருந்தன (சட்டநாதன் கமிசன் முடிவு). ஆக, தி.க., தி.மு.க. இயக்கங்கள் பார்ப்பனரல்லாத மேல்சாதிகளின் ''உரிமை''க்காகவே பாடுபடுகின்றன. (ஆதாரம்: மண்டல் கமிசன் அறிக்கை பக்.147-149) இதுதான் பொதுஉரிமையா?

**பொதுவுடமை நோக்குண்டா?:** 'ஈரோட்டுத் திட்டம் ' என்றழைக்கப்பட்ட ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் திட்டத்தைக் காட்டித்தான் இவ்வாறு தி.க. உரிமை பாராட்டுகிறது. ஆனால் கம்யூனிஸ்டுகள் மீதான தாக்குதலைக் கண்டஞ்சி 1930களிலேயே பெரியார் அதைக் கைகழுவி விட்டார். அதை வெறும் சீர்திருத்தத் திட்டமாக்கியதைத்தான் ''சுயமரியாதை இயக்கம் அவமரியாதை இயக்கமாகி விட்டதென்று'' கூறி ஜீவா, சிங்காரவேலர் போன்றவர்கள் பெரியாரிடமிருந்து விலகினர். அதன்பிறகும் பொதுவுடமை நோக்கிருப்பதாக புளுகுகிறது தி.க.

**தனவந்தர் கட்சியில்லையா?:** பதவி வெறி - பதவிச் சண்டை, லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் அம்பலமாகி, தேர்தல்களில் படுதோல்வி கண்டபிறகு நீதிக் கட்சியின் மிட்டா மிராசுகள், ஜமீன்கள், சமஸ்தான அதிபதிகள் ஆகிய கனதனவான்கள் பெரியாரின் தலைமைக்குள் தஞ்சமடைந்தனர். பள்ளர், பறையர் கட்சி என்பதெல்லாம் இந்த உண்மையை மறைக்கத்தான். நாடாளுமன்ற - சட்டமன்ற அமைப்பின் கீழ் தனவந்தர்கள் நேரடியாக கட்சி இயக்கங்களில் ஈடுபடுவது குறைவு. தி.க., தி.மு.க., காங்கிரசு, ஜனதா, பாரதீய ஜனதா போன்ற கட்சிகள் அவர்களின் அறிவுபூர்வமான பிரதிநிதிகளாக உள்ளன. ஆகவே பார்ப்பனரல்லாத தனவந்தர்கள் தி.க.வில் நேரடியாக இருக்கின்றனரா என்பது முக்கியமல்ல.

அதற்குப் பதிலாக பூங்குன்றன், ராஜேந்திரன், சாமிதுரை, போன்றவர்களைக் கம்பெனி அடிப்படையில் வேலைக்கு வைத்து இயங்குவதுதான் தி.க. 300 கோடி சொத்துக்கு எவ்வித மேற்பார்வை அனுமதியுமின்றி அறக்கட்டளைகள் வைத்துப் பல தொழில்கள் நடத்தும் வீரமணியே ஒரு பெரிய தனவந்தர் இல்லையா?

■ **ஆர்.கே.**



# அடக்குமுறைக்கு அஞ்சிடோம்

பெரியார் மாவட்டம் குருவாரெட்டியூரில் செப்டம்பர் மாதம் நடந்த வி.வி.மு. ஒன்றிய மாநாட்டில் பேசியதற்காக தோழர்கள் மாது, கதிர்வேலன், கே.பி.ராமசாமி, மருதையன், சீனிவாசன் ஆகியோர் மீது வன்முறையை தூண்டினார்கள் என்று (பிரிவு 124 A சட்டத்தின் கீழ்) குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். தோழர்கள் மாது, கதிர்வேலன் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். மேடை போட்டு பேசுவது குற்றமா? கருணாநிதி அரசிற்கு ஆட்சிக் கவிழ்ப்பு பீதி வந்தால் மூச்சு விடுவதும் குற்றம்தான்! கருணாநிதி அரசின் அடக்குமுறையைக் கண்டித்து தமிழகம் எங்கும் பிரச்சாரம் எடுக்கப்பட்டது.

மக்கள் கலை இலக்கிய கழகம் - கடலூர், விவசாயிகள் விடுதலை முன்னணி - தி.வெ.நல்லூர், தொழிலாளர் பிரச்சாரக் குழு - நெய்வேலி ஆகிய அமைப்புகள் இணைந்து கருணாநிதி அரசின் அடக்குமுறையைக் கண்டித்து கடலூரில் ஊர்வலம் நடத்தின. ''ஆட்டோ சங்கரை வீட்டுக்கு அனுப்பி வைத்த போலீசே, சந்தனக் கட்டை வீரப்பனை பிடிக்க வக்கற்ற போலீசே, வி.வி.மு. தோழர்களை கைது செய்தது ஏன்?'' என்று ஊர்வலத்தில் எழுப்பிய முழக்கங்கள் மக்களை ஈர்த்தது. தோழர் தீனு தலைமை தாங்க 40 பேர் கலந்து கொண்ட ஊர்வலம் ஆர்ப்பாட்டத்துடன் முடிவடைந்தது. தோழர் நாராயணன் ஆர்ப்பாட்ட முடிவில் சிறப்புரையாற்றினார். தோழர்கள் பாடிய 'ஏழை மக்களை பாதுகாக்க போலீசு இருக்குதா?' என்ற பாடல் வீச்சாக அமைந்தது.

தோழர் மாது கைது செய்யப்பட்ட செய்தி எட்டியதும் அம்மாப்பேட்டை விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக கைதை கண்டித்து ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தப்பட்டது. இதுவல்லாமல் தோழர் மாது கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்ட பொழுது கோர்ட் வாயிலில் விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

கல்லை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் கதிர்வேலன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து 12.12.90 அன்று சங்கராபுரத்தில் ஊர்வலம் நடத்தியது. பெண்கள், மாணவர்கள் உட்பட சுமார் 300 பேர் கலந்து கொண்டு விண்ணதிர முழக்கமிட்டனர். இதுவல்லாமல் கல்லை வட்டம் முழுவதும் சுவரொட்டி துண்டு பிரசுரம் இயக்கம் எடுக்கப்பட்டது. 30 இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

மேலும் திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டமும், தஞ்சையில் ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. சென்னை, திருவையாறு, திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் சுவரொட்டி இயக்கம் எடுக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

கோவை சிறையில் தனித்தனி அறையில் அடைக்கப்பட்டுள்ள 47 காஷ்மீர் போராளிகளை ஒன்றாகவே சந்திக்க விடாமல் சித்திரவதை செய்து வருகிறது சிறை நிர்வாகம். போராளிகள் வந்த நாளிலிருந்தே இதைக் கண்டித்து குரலெழுப்பி வந்தனர். டிச.11-ந் தேதி சிறை வார்டன் போராளி ஒருவரை தாக்கவே, அடிதாங்க முடியாத அவர் வார்டனை திருப்பி தாக்கி சாவியை பிடுங்கி தனது சகாக்களின் அறையை திறந்துவிட்டு அவர்களிடம் முறையிட்டார். போராளிகள் ஒன்றாகக் கூடி இதை எதிர்க்க முற்படுவதற்கு முன்பே வார்டன் பலருடன் வந்து போராளிகளை பலமாக தாக்கி மீண்டும் செல்களில் பிரித்து அடைத்தார். இச்சம்பவத்தை நாளேடுகள் அனைத்தும் திரித்து செய்திகள் வெளியிட்டன. இதுவல்லாமல் காஷ்மீரிலிருந்து கோவைச் சிறைக்கு டிச.18-ந் தேதி கொண்டு வரப்பட்ட 13 போராளிகளை கண்ணைக் கட்டி அழைத்து வந்தார்கள் போலீசு அதிகாரிகள். இன உரிமை, ஜனநாயக உரிமை பற்றி பேசும் கருணாநிதி அரசு இன உரிமைப் போராளிகள் மீதான அடக்குமுறைகள் அனைத்தையும் பொறுமையாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. தீவிரவாதிகள் தப்பிக்காமல் தக்க நடவடிக்கை எடுத்ததாகக் கூறி தலைமை வார்டன் சுப்ரமணிக்கு பரிசு வேறு வழங்கப் போகிறார்களாம்! வெட்கக் கேடு!



ஒரிசா முதல்வர் பிஜுபட்நாயக், ஊழல் செய்யும் அதிகாரிகளை மக்கள் முன் வந்து தண்டிக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யுமுன் தன்னிடம் அனுமதி பெறும்படியும் மேடைதோறும் பேசிவந்தார். கேந்திர பாரா பகுதி இளைஞர்கள் சிலர் முன்வந்து பட்நாயக்கிடம் ஊழலதிகாரிகளை தண்டிக்க அனுமதி கேட்டனர். ஆனால் பட்நாயக், அவர்களை சாந்தப்படுத்தி தண்டிக்க வேண்டாம்; நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறியதோடு அவர்கள் தைரியமாக முன்வந்ததற்கு பரிசுத் தொகையாக ரூ.200-ம் கொடுத்தனுப்பினார். பல பகுதிகளிலோ இளைஞர்கள், இன்ன அதிகாரியை தண்டிக்கப் போகிறோம் என முதல்வருக்கு தந்தி கொடுத்துவிட்டு தண்டிக்கவும் செய்தனர். பூரி பகுதியைச் சேர்ந்த ஒரு நகராட்சி அதிகாரியையும் மக்கள் மத்தியில் வைத்து செமத்தியாக சாத்தினர். இன்னும் பல இடங்களில் இளைஞர்கள் ஊழலதிகாரிகளை தண்டிக்கப் போவதாக பட்டியலிட்டு அறிவித்து இருக்கிறார்கள். அதிகாரிகள் பலர் கூச்சல் போட்டும் மாணவர்களின் நடவடிக்கையை கண்டுகொள்ளாமல் மறைமுக ஆதரவளிக்கிறார் பட்நாயக். அதிகாரிகள் எல்லாம் காங்கிரசுக்காரர்கள் என்பதாலேயே இப்படி ஸ்டண்ட் அடிக்கிறார் பட்நாயக். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆயுதம் வழங்குவோம்; பினாமி நிலங்களை பறிமுதல் செய்து கூலி விவசாயிகளுக்கு கொடுப்போம் - இது போன்று சவடாலடித்த எத்தனை ஆட்சியாளர்களை நாம் பார்த்திருப்போம்?

லண்டன் - 'பாப்' இசைப் பாடகி சாமந்தா பாக்ஸ் இந்தியாவிற்கு வந்து பம்பாய், டில்லி, சென்னை நகரங்களில் நிகழ்ச்சி நடத்தினாள். இவளின் ஆபாச நடனங்களடங்கிய வெறிக்கூச்சலை ரசித்து மேட்டுக்குடி விடலைகள் கும்மாள மடித்தனர். ரூ.100, 300 என்று கட்டணம் வைத்து ஆயிரக்கணக்கான மேட்டுக்குடி ரசிகர்களிடமிருந்து லட்சக்கணக்கில் பணம் குவித்தது இந்நிகழ்ச்சி. ஊமைகள் மற்றும் செவிடர்கள் நல்வாழ்விற்காக மந்திராலயா தர்ம அறக்கட்டளை வளர்ச்சி நிதிக்காக இந்த ஆபாசக் கூத்து நடத்தப்பட்டது. கண்ணை விற்று சித்திரம் வாங்கும் கதை இதுதான் போலும்!

கேரளாவில் 'மார்க்சிஸ்டுகள்', சுயநிதி கல்லூரிகளுக்கு ஏற்கனவே அனுமதி அளித்திருப்பதோடு அல்லாமல் புதிய பல கல்லூரிகளுக்கும் அனுமதியளிப்பதைப் பற்றி பரிசீலித்து வருகிறார்கள். ''12ம் வகுப்புகளுக்குரிய தனியார் பள்ளிகள் - டுடோரியல் காலேஜ் - தொடங்குவதற்கும் விரைவில் அரசின் அனுமதி கிடைக்கும்'' என்று கூறியுள்ளார் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் மாநிலக்குழு அமைப்பாளரான எம்.எம்.லாரன்ஸ். பிற மாநிலங்களில் சுயநிதிக் கல்லூரி - டுடோரியல் காலேஜ் கொள்ளைக்கு எதிராக முஷ்டியை உயர்த்தும் 'மார்க்சிஸ்டு'களின் யோக்கியதையைப் பாருங்கள்.





துணி உற்பத்திக்கு புகழ்பெற்ற பின்னி மில் நட்டத்தில் ஓடுவதை காரணம் காட்டி ஏற்கனவே ஆலையின் பல பிரிவுகளை மூடி எண்ணற்ற தொழிலாளர்களை வீதிக்குத் தள்ளியது. மீண்டும் இதே காரணத்தைக் காட்டி வருகிற மார்ச் 19-ந் தேதி மொத்தமாக ஆலையை இழுத்து மூடிவிட்டு தென்னாற்காட்டில் உள்ள புவனகிரியில் நவீன முறையில் தொடங்கப் போவதாக அறிவித்துள்ளது. இன்று 6,200 தொழிலாளர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகி நிற்கிறது. ஆலையை நவீனப்படுத்துவதால் 1300 தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள் என்று அறிவித்துள்ளதோடு ஏனைய தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கான எந்தவித உத்திரவாதமும் அளிக்கவில்லை நிர்வாகம். ஏதாவது ஒரு காரணம் காட்டி ஆலையை மூடுவது - நவீனப்படுத்துவதன் மூலம் ஆட்களைக் குறைத்து வேலைப் பளுவை அதிகரித்து கொள்ளை லாபமடிக்க முயலும் நிர்வாகத்தையும் முதலாளி ராமசாமி உடையாரையும் அம்பலப்படுத்தி எதிராக போராடுவதற்குப் பதிலாக அனைத்து தொழிற்சங்கங்களும் வேலையிழப்பவர்களின் எண்ணிக்கையை 1,300 லிருந்து 700 ஆக குறைக்கும்படி பேரம் பேசியுள்ளன. இதைவிட துரோகம் வேறு இருக்கிறதா?

அமிதாப்பச்சன் தலைமையில் 93 பேர் அடங்கிய நட்சத்திர கும்பல் அடுத்த மாதம் இசைநிகழ்ச்சி நடத்துவதற்காக நிற வெறிபிடித்த தென்னாப்பிரிக்காவிற்கு செல்ல இருக்கிறது. பப்பிலஹிரி, பங்கஜ் உதாஸ் உட்பட பலர் இதற்கான மனு தாக்கல் செய்திருந்தும் அமிதாப்பிற்கே முன்னுரிமையளித்து அனைத்து விதிமுறைகளையும் மீறி அனுமதியளித்துள்ளது ராஜீவ் - சந்திரசேகர் அரசு. தென்னாப்பிரிக்க அரசின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்து தென்னாப்பிரிக்க அரசுடனான அனைத்து உறவுகளையும் ரத்து செய்துள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஏன் இந்திய கடவுச் சீட்டிலேயே தென்னாப்பிரிக்க குடியரசைத் தவிர அனைத்து நாடுகளுக்கும் செல்லலாம் என்ற விதியிருக்கிறது. ஆனால் அனைத்தையும் மீறி தென்னாப்பிரிக்க அரசுடன் கலாச்சார உறவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ராஜீவ் - சந்திரசேகர் கும்பலின் முற்போக்கும் நிறவெறி எதிர்ப்பு கொள்கையின் லட்சணமும் இது தான்!



படிப்பகம்

www.padippakam.com




**பாண்டிச்சேரி ஆட்சிக் கவிழ்ப்பு நாட்டின் அரசியலில் குறிப்பாக மாறுதல் எதையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால் அது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் போலித்தனத்தை மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்திவிட்டது.**

# வானளாவிய அதிகாரத்தின் விளைவு

இந்திய யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி ஒரு குட்டி மாநிலம்தான்! அதிகபட்சம் போனால் தமிழ் நாட்டில் உள்ள ஒரு சட்டமன்ற தொகுதி அளவுதான்! அங்குள்ள ஒவ்வொரு சட்ட மன்றத் தொகுதியும் இங்குள்ள ஒரு நகரவை அல்லது பஞ்சாயத்து 'வார்டு' அளவுதான் இருக்கும்!

இருந்தாலும், ஒருவகையில் பாண்டிச்சேரி மக்கள் கொடுத்து வைத்தவர்கள். இந்தியா முழுவதும் நடக்கும் எல்லா அரசியல் வினோதங்களையும் அவர்கள் தங்கள் குட்டி மாநிலத்துக்குள்ளேயே கண்டு களிக்கலாம்.

சட்டமன்றத்தில் யாருக்கும் பெரும்பான்மை இல்லாத நிலை; சந்தர்ப்பவாத பேரங்கள் அடிப்படையில் கூட்டு மந்திரிசபை; பேரங்கள் முறிவு, கூட்டு மாற்றம், கட்சிப் பிளவு, கட்சி தாவல், எம்.எல்.ஏக்கள் விலைபோவது, ஆட்சிக் கவிழ்ப்பு; மீண்டும் புதிய கூட்டு மந்திரி சபை; அல்லது ஆளுநர் ஆட்சி, மீண்டும் தேர்தல், இவற்றோடு சேர்ந்த எல்லா அரசியல் ஆபாசங்கள்.

இந்தவகை அரசியலுக்குத் தென்னாட்டிலேயே முன்னோடிகளாய் விளங்குகிறார்கள், பாண்டிச்சேரி அரசியல்வாதிகள். இப்போது மீண்டும் ஒருமுறை அதையே அரங்கேற்றுகிறார்கள்.

பல ஆண்டுகாலமாய் இந்த வகை அரசியல் விபச்சார விளையாட்டின் நாயகனாய் விளங்குபவர் காங்கிரசின் ஃபரூக் மரைக்காயர். தி.மு.க.வின் டி.ராமச்சந்திரனும், அ.தி.மு.க.வின் ராமசாமியும் இதிலே ஃபரூக்குக்குச் சளைத்தவர்கள் அல்ல. 'சுயேச்சை' காமிச் செட்டியும், போலிக் கம்யூனிஸ்டு சுப்பையாவும் இறந்து போனது பாண்டிச்சேரியின் இந்த வகை அரசியலுக்குப் பேரிழப்புதான்!

மத்தியில் ராஜீவ், ஜெயலலிதா தயவிலான சிறுபான்மை பினாமி ஆட்சி வந்ததுமே தமிழ்நாடு, பாண்டிச்சேரி தி.மு.க. மந்திரி சபைகளுக்கு ஆபத்து தோன்றிவிட்டது. ராஜீவ் - சந்திரசேகர் கூட்டுக்கு ஜெயலலிதா போட்டுள்ள நிபந்தனைகளில் முக்கியமானது இவற்றைக் கலைப்பதுதான்.

வாயை இறுக்கக் கட்டிக் கொண்டு, வாலைச் சுருட்டிக் கொண்டு நெடுஞ்சாண்கிடையாக மத்திய அரசிடம் கருணாநிதி சரணடைந்ததால் தலை தப்பியிருக்கிறது, தற்காலிகமாக! ஆனால், பாண்டிச்சேரி மந்திரிசபையை அவரால் காப்பாற்ற முடியவில்லை.

பாண்டிச்சேரி ஆட்சிக் கவிழ்ப்பு நாட்டின் அரசியலில் குறிப்பாக மாறுதல் எதையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால், அது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் போலித் தனத்தை மீண்டும் ஒரு முறை அம்பலப்படுத்தி விட்டது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயிர் நாடியெனச் சொல்லப்படுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆள்வது! அப்படி மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆட்சியை மத்திய அரசு விரும்பும்போது - ஜனநாயகவிரோதமாக - தூக்கி எறிந்துவிடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது!

இந்தியா மாநிலங்களின் கூட்டமைப்பைக் கொண்டது. அந்தக் கூட்டமைப்பிலிருந்து மாநிலங்கள் விலகிப் போய்விடக் கூடாது எனவும், அதைக் கண்காணிக்கவும் மாநில ஆளுநர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், அந்த ஆளுநர்கள் மத்திய ஆளும்கட்சி, ஆட்சியின் ஏஜெண்டாக எடுபிடியாகவே நடந்து கொள்கிறார்கள்.

கட்சி மாறுதலும் ஆட்சிக் கவிழ்ப்புகளும் எல்லை மீறிவிடவே கட்சிதாவல் தடைச்சட்டம் வந்தது! அதை அமுல்படுத்தும் அதிகாரம் முழுவதும் நாடாளுமன்ற சட்டமன்ற சபாநாயகர்களிடம் குவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் கட்சி சாராதவர்கள் என்பது வெறும் மரபாகத்தான் உள்ளது. எனவே, சபாநாயகர்களே கட்சிசார்பு சர்வாதிகாரர்களாகவும், பதவி வேட்டைக்காரர்களாகவும் இருக்கிறார்கள்.

எனவே, இந்த நிலை, மாநிலங்களின் உரிமைகளைக் காலில் போட்டு மிதிப்பதாகவும், ஜனநாயகம் என்பதே கேலிக் கூத்தாகவும் தான் இன்றைய அரசியல் அமைப்பு இருப்பதை நிரூபிக்கிறது.

கடந்த 23 ஆண்டுகளில் ஏறக்குறைய 150 தடவை மாநில ஆட்சிகள் கலைக்கப்பட்டு ஆளுநர் ஆட்சி பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. அதே அளவு ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு முறை இப்படி ஆட்சிக் கலைப்போ, ஆட்சிக் கவிழ்ப்போ நடக்கும்போதும் குறிப்பிட்ட ஆளுநர் அல்லது சபாநாயகர் நடந்து கொண்ட விதம் சரியா, தவறா என்பது தான் பெரும்பாலும் விவாதிக்கப்படுகிறது.

கூடுதலாக குறிப்பிட்ட நபர் அந்தந்தப் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் தானா என்று கேள்வி எழுப்பப்படுகிறது. நேர்மையான, மதிப்பும், தகுதியுமுடைய நபர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

மத்திய - மாநில உறவுகள் பற்றிய ஆய்வுக்காக அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிசனும் இதையே பரிந்துரைத்தது. "ஆளுநராக நியமிக்கப்படுவர் உள்ளூர் அரசியலோடு தொடர்பு வைத்திருக்கக் கூடாது. எங்கேயும் சமீபகால அரசியலில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருக்கக் கூடாது" என்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த மாதிரியான விவாதங்களும், தீர்வுகளும் நபர்கள் மீதான குறைகளைத்தான் முன்னிருத்துகின்றன. ஆனால், பிரச்சனையின் மையம் அதுவல்ல. அதிகாரம். ஆளுநர்களுக்கும் சபாநாயகர்க ளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம். அதுதான் முக்கியம். அதிகா ரம் எப்படிப்பட்ட அரசியல்வாதிகளையும் ஊழல்படுத்திவிடும் வகையில் அரசியல் அமைப்பே உள்ளது; அதுவும் முக்கியமானது.

''ஒவ்வொரு மாநிலத்திலும் அரசுத் தலைவராக ஆளுநரே இருப்பார்; அவரின் கீழ் ஒரு மந்திரிசபை இருக்கும்; மந்திரி சபை யின் ஆலோசனைப்படி ஆளுநர் செயல்படுவார். குறிப்பிட்ட மந்திரி சபை சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றுள்ளதா, இல் லையா என்பதை ஆளுநர்தான் தீர்மானிப்பார்; அவரது முடிவே இறுதியானது.

இப்படி வரைமுறையில்லாத அதிகாரம், மக்களால் தேர்ந்தெ டுக்கப்படாத, மத்திய அரசின் நியமனம் பெற்ற ஆளுநருக்கு இருக்கி றது. இதே போலத்தான் கட்சிதாவல் தடைச்சட்டத்தைப் பிரயோகிப் பதில் வரைமுறை இல்லாத அதிகாரம், சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் சபாநாயகருக்கு இருக்கிறது.

**ஒவ்வொருமுறை இப்படி ஆட்சிக் கலைப்போ, ஆட்சிக் கவிழ்ப்போ நடக்கும்போதும் குறிப்பிட்ட ஆளுநர் அல்லது சபாநாயகர் நடந்துகொண்ட விதம் சரியா, தவறா என்பதுதான் பெரும்பாலும் விவாதிக்கப்படுகிறது.**

ஒரு உறுப்பினர் அக்கட்சியின் உத்திரவு (கொறடா)க்கு மாறாக வாக்களித்தாலோ, வாக்களிப்பில் கலந்து கொள்ளாது புறக்கணித் தாலோ அவர் கட்சித் தாவியவராகக் கருதப்படுவார். மூன்றில் ஒரு பகுதியினர் கட்சி உத்திரவை மீறினால் அதுகட்சி தாவியது ஆகாது; பிளவாகும். அப்படிப் பிளவுபட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கி னர் ஆதரவுடன்தான் மாற்றுக் கட்சியில் இணைய முடியும். ஆனால், இவை அனைத்தையும் தீர்மானிக்கும் உரிமை சபாநாயக ருக்குத்தான் உண்டு; அவரது முடிவே இறுதியானது.

சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம்பெற்றிருந்தாலும் ஆட் சியைக்கலைத்து, ஆளுநரே நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள் ளும் ஏதேச்சையான அதிகாரமும் அவருக்குண்டு. மத்திய அரசின் ஏஜெண்டு - எடுபிடி என்கிற முறையில் இப்படிச் செய்வதற்கான முழு அதிகாரமும் அவருக்குண்டு.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் 356 வது பிரிவு இந்த அதிகாரத்தை வழங்குகிறது. அதன்படி, ''அரசியல் நிர்ணயச் சட்டப் படி ஒரு மாநில அரசாங்கம் செயல்படாத நிலை உருவாகி விட்டதாக ஆளுநர் அறிக்கை மூலமாகவோ, வேறு வகையிலோ அறிந்து கொள்ளும் அரசுத் தலைவர் திருப்திப் படுவாரேயானால், மாநில அரசாங்கத்தின் நிர்வாகம் முழுவதையோ, சில பகுதிகளையோ அவர்மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளது.''

இந்திய அரசுத் தலைவரும் ஆளுநரும் மேற்கண்டவாறு முடிவு செய்வதற்கு சட்டபூர்வமான வரையறுப்பு எதுவும் கிடையாது; அவர்களே தான்தோன்றித்தனமாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். அரசியல் நிர்ணயச் சட்டப்பிரிவு 163 இதைத் தெளிவாகவே உறுதி செய்கிறது.

அதன்படி, ''இந்த அரசியல் சட்டத்தின்கீழ் ஆளுநரது முடிவு சம்பந்தமாக எழும் எந்தப் பிரச்சனையிலும் ஆளுநரின் முடிவே இறுதியானது; அவர் அப்படிச் செய்திருக்கலாமா அல்லது கூடாதா என்று எழுப்பப்படும் பிரச்சனை எதுமே செல்லத் தக்கதல்ல'' என்கி றது.

ஆளுநருக்குள்ள இந்த வானளாவிய அதிகாரத்தைப் பயன்ப டுத்தி ஆட்சிக் கலைப்பு செய்வதில் பிள்ளையார் சுழிபோட்டவர் பாசிச இந்திராதான். 1959இல் கேரளாவில் போலிக் கம்யூனிஸ்டு நம்பூதிரிபாடு தலைமையில் கூட்டணி மந்திரிசபை இருந்தது. அப் போது காங்கிரசுத் தலைவியாய் இருந்த இந்திராவே தூண்டிவிட்ட கலவரம், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையைக் காரணம் காட்டி ஆட்சிக் கலைப்பு செய்து, கட்சி மாறிகளை வைத்து மாநில மந்திரி சபை நிறுவினார்.

1983ம் ஆண்டு, ஆந்திராவில் என்.டி.ஆர் தலைமையிலும், காஷ்மீரில், ஃபரூக் தலைமையிலும் பெரும்பான்மை பலமிருந்தும் இந்திரா அவர்களது ஆட்சியைக் கலைத்தபோது இந்திய ஜனநாய கத்தின் போலித்தனம் அம்மணமாக நின்றது.

ஆளுநருக்கு இருப்பதைப் போலவே தான்தோன்றித் தனமான முடிவுகள் எடுப்பதற்கு சபாநாயகருக்கும் அதிகாரம் உண்டு எம்.ஜி. ஆரின். எடுபிடியாக இருந்த சபாநாயகர் பி.எச்.பாண்டியன் தனது வானளாவிய அதிகாரத்தைக் காட்டியபோது அதை நாடறிந்தது. அவர் வழக்கு மன்றத் தீர்ப்புளை மாற்றிக் கிரிமினல் குற்றவாளிகளை விடுவிக்க உத்திரவு போட்டார். சட்ட எரிப்புப் போராட்டம் நடத்திய தற்காக எம்.எல்.ஏக்களைப் பதவி நீக்கம் செய்தார். இதற்கெல்லாம் அதிகாரம் உண்டென்று நிரூபித்தார்.

ஆளுநருக்கும் சபாநாயகருக்கும் உள்ள இந்த அதிகாரங்களை யும், அவர்களது முடிவுகளையும் எதிர்த்து எதுவும் செய்யமுடியாது; வழக்கு மன்றங்களுக்குப் போன எந்த விவகாரத்திலும் இதுவரை முடிவே கண்டதில்லை. அதற்குள் மறுதேர்தல்களும், புதிய ஆட்சிக ளும் வந்து வழக்குகள் காலாவதியாகிப் போனதுதான் கண்ட கதை!

நாடாளுமன்ற சபாநாயகருக்கும், இந்திய அரசுத் தலைவருக் கும் இதைவிடக் கூடுதலாக அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. தாய்க் கட்சிகளின் எடுபிடிகள் என்கிற முறையில்தான் இவர்களும் நடந்து கொள்கின்றனர்.

மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரசு ஏகபோக ஆளும் கட்சி யாக இருந்தவரை இந்த விவகாரங்கள் அப்பட்டமாக வெளிவர வில்லை. அதுவரை செல்லப்பாண்டியன், மாவ்லாங்கர் போன்ற ஜனநாயக வேடதாரிகளை சபாநாயகர்களாகவும் மைசூர் மகாராஜா, பத்மஜா நாயுடு, ராதாகிருஷ்ணன் போன்ற கொலுபொம்மைகளை ஆளுநர், அரசுத் தலைவர்களாகவும் வைத்திருந்தனர்.

காங்கிரசின் ஏகபோக நிலை வலுவிலக்கத் துவங்கியதுமே தமது எடுபிடிகளாகப் பார்த்து இந்தப் பதவிகளுக்கு நியமித்தனர். பலராம் ஜாக்கரையும் தில்லானையும் சபாநாயகர்களாகவும் ஜக்மோ கன், குரானா போன்ற முன்னாள் அதிகாரிகள்; கிருஷ்ணா, லத்தீப் போன்ற இராணுவத் தளபதிகள்; ஜோதிவெங்கடாசலம், பா.ராமச் சந்திரன் போன்ற செல்வாக்கில்லா அரசியல் தலைவர்கள் ஆகி யோரை ஆளுநர்களாகவும் பக்ருதீன் அலி அகமது, ஜெயில்சிங், வெங்கடராமன் போன்ற இந்திரா - நேரு பரம்பரை விசுவாசிகளை அரசுத் தலைவர்களாகவும் நியமித்தனர்.

1977லும், 1989லும் ஆட்சிக்கு வந்த ஜனதா மேற்கண்ட பாதை யில் இருந்து மாறிப்போய் விடவில்லை. கடந்த ஆண்டு ஒரே சமயத் தில் 11 ஆளுநர்களை மாற்றியதோடு தமது கூட்டணிக் கட்சிகளுக் கும் பதவிகளைப் பகிர்ந்தளித்தது. ஆட்சிக் கவிழ்ப்புகளை செய்யத் தவறவில்லை. இப்போது சந்திரசேகர் - ராஜீவ் கூட்டு அரசாங்கமும் அதே வேலையைத்தான் செய்கிறது. தமது எடுபிடிகளை புதிய கவர்னர்களாக நியமித்துள்ளது. சபாநாயகர்களை தமது எடுபிடிக ளாக மாற்றியுள்ளது.

**ஆளுநருக்கும், சபாநாயகருக்கும் உள்ள வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இதுவரை சராசரி மாதம் ஒரு மந்திரிசபையாவது கவிழ்க்கப்பட்டுள்ளது அல்லது கலைக்கப்பட்டுள்ளது.**

கடைசியாக பாண்டிச்சேரியிலும், குஜராத்திலும் நடக்கும் அரசி ய்ல் விபச்சார - விளையாட்டுக்கள் அனைத்தும் காட்டுவது என்ன? நாடாளுமன்ற, சட்டமன்ற அவைத் தலைவர்களுக்கும், மாநில - மத்திய அரசுத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் வானளா விய அதிகாரங்கள் இந்தியக் கூட்டமைப்பு மற்றும் நாடாளுமன்ற ஜனநாயகம் ஆகியவை உண்மையில் சர்வாதிகார அரசியல் அமைப் பையே அடிப்படையாகக் கொண்டிருப்பவை என்பதைத் தானே!

● மணிவாசகம்



படிப்பகம்

www.padippakam.com




● *'புதிய ஜனநாயகம்' இதழில் மாவோ பிறந்த தினத்தை ஏன் குறிப்பிடவில்லை? இப்படிச் சிறப்பு நாட்களைச் சுட்டிக் காட்டாமல் எப்படி அவர்களது சிந்தனை மூலம் செயல்படுவீர்கள்?*

**— ஆர்.ஆர்.தமிழன், மதுரை.**

○ பாட்டாளி வர்க்கத்துக்குரிய இப்படிப்பட்ட சிறப்பு நாட்களைப் பட்டியலிட்டுப் பாருங்கள். ஒவ்வொரு சமயத்திலும் அனைத்தையும் பற்றி எழுதுவது சாத்தியமும் அல்ல; அவ்வாறு செய்வது அவற்றின் முக்கியத்துவத்தையும் இழக்கச் செய்துவிடக்கூடாது. எனவே 50 ஆம் ஆண்டு, 100 ஆம் ஆண்டு அல்லது வேறு ஏதாவது தனிச் சிறப்பானது என்று வரும்போது குறிப்பிட்டு எழுதுவது என்பதைக் கொள்கை முடிவாகக் கொண்டுள்ளோம். இதனால், அந்நாட்களுக்குரிய முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பதாகவோ, புறக்கணிக்கப்பதாகவோ கருத வேண்டியதில்லை.

● *தர்மபுரியில் 'நக்சலைட்டுகள்' வீடு புகுந்து கொள்ளை அடிக்க முயற்சிக்கையில் வெடிகுண்டு தவறி விழுந்து, வெடித்து இருவர் இறந்தனர். 9 பேர்களைக் கைது செய்துள்ளனர் என்று தீக்கதிர், தினமணி, தினத்தந்தி போன்ற பத்திரிக்கைகளில் வந்த செய்தியில் விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றிருந்தது. அதற்குத் தங்கள் விளக்கம் என்ன?*

**— வசந்தன், கம்பம்.**

○ பொய்ச் செய்திதான்! 'தனித்தமிழ்நாடு' என்ற முழக்கத்தை வைத்து செயல்படும் சில குழுக்களின் தனிநபர் பயங்கரவாத - அராஜக வாத நடைமுறைதான் அது. இக்குழுக்களின் லட்சியம் - கொள்கை நடைமுறைகளை விவசாயிகள் விடுதலை முன்னணியும் மக்கள் கலை இலக்கியக் கழகமும் எப்போதும் எதிர்த்தே வந்துள்ளன. அமைப்பு ரீதியிலும் எவ்வித் தொடர்பும் கிடையாது. பத்திரிக்கை, பிரசுரங்கள் மூலம் இவை பிரகடனப் படுத்தப்பட்டு இருக்கின்றன. அரசு - போலீசுக்கும், பிற பத்திரிக்கைகளுக்கும் இந்த உண்மை நன்றாகவே தெரியும்; ஒப்புக் கொள்ளவும் செய்கின்றன.

இருந்த போதும் குடமுருட்டி பாலம் குண்டு வெடிப்பு; திருச்சி - நேருசிலை, தஞ்சை - நினைவுத்தூண் தகர்ப்பு; பட்டுக்கோட்டை வாகனங்கள் எரிப்பு; இப்போது தர்மபுரிக் கொள்ளை, கொலை, குண்டு வெடிப்பு, கைது போன்ற சம்பவங்களில் சம்பந்தமின்றியே வி.வி.மு மற்றும் ம.க.இ.க.வுக்கு எதிராக அவதூறுகளும் பொய் வழக்குகளும் தொடுக்கப்படுகின்றன. தமிழகத்தில் விவசாயிகளை அமைப்பு ரீதியில் திரட்டும் ஒரே புரட்சிகர அமைப்பாக வி.வி.மு. உள்ளது. இப்பணியிலும், தொழிலாளர்களை அமைப்பு ரீதியில் திரட்டுவதிலும் ம.க.இ.க. துணைபுரிகிறது. ஆகவே, இப்போது தாக்குதலுக்குரிய சிறப்பான இலக்குகளாக இவ்வமைப்புகளைத் தெரிவு செய்து இவற்றின் முன்னணித் தோழர்கள் மீது தேச துரோக வழக்குகள் போடுகின்றனர். இத்தகு தாக்குதல்களுக்கு முகாந்திரமாக மேற்கண்ட தனி நபர் பயங்கரவாத, அராஜகவாதச் செயல்களில் ஈடுபட்டதாக ம.க.இ.க மற்றும் வி.வி.மு மீது பழி போடுகின்றனர், பத்திரிகைகளும் போலீசும்.

● *மன ஓசையில் கூட எழுதும் கோ.கேசவன், அ.மார்க்ஸ், ப.கல்யாணி போன்ற பேராசிரியர்கள், கலை இலக்கியவாதிகள் ஏன் உங்கள் பத்திரிகையில் எழுதாமல் உள்ளனர்? உங்களின் வறட்டுத்தனமான அணுகுமுறையினால் தானே?*

*எழுதப்படிக்கத் தெரியாத விவசாயிகளையும் சொல்வதைக் கேட்டுத் தலையாட்டும் நபர்களையுமே கொண்டு என்ன செய்துவிடப் போகிறீர்கள்? ஏன் பேராசிரியர் அ.மார்க்ஸ் போன்ற சிந்தனையாளர்களை இணைத்துச் செயல்பட மறுக்கிறீர்கள்?*

**— சுந்தரேசன், அண்ணாநகர், மதுரை.**

○ புதிய ஜனநாயகமும் இதன் தோழமை ஏடான புதிய கலாச்சாரமும் மாறுபட்ட கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யும் பொதுமேடை அல்ல. குறிப்பான திட்டம், லட்சியம் - கொள்கையைப் பிரச்சாரம் செய்வதற்கானவை தான். எனவே, இவற்றில் மாறுபடும் மேற்கண்ட பேராசிரியர்கள், கலை இலக்கியவாதிகளுக்கு இடமில்லை. மேலும் பேராசிரியர்கள், கலை இலக்கியவாதிகள், ஆய்வாளர்களுக்காக மட்டுமே அவர்கள் எழுதுகிறார்கள். அதற்காக மட்டும், அப்படிப் பட்டவர்களைப் பிரதானமாகக் கொண்டு இந்த ஏடுகள் நடத்தப்படவில்லை.

குறிப்பிட்ட திட்டம், லட்சியம் - கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், தமது சொந்த முயற்சியினால் ஒரு பிரச்சார மேடை அமைத்துக் கொள்வது என்கிற உரிமை - சுதந்திரம் இந்த ஏடுகளுக்குக் கிடையாதா? அந்த உரிமை - சுதந்திரத்தை எமக்கு மறுப்பதும், வறட்டுத்தனமென்று முத்திரை குத்துவதும் எவ்வளவு சர்வாதிகாரமானது என்று 'இந்த ஜனநாயகவாதி'களுக்கு ஏனோ தெரியாமல் போய்விட்டது. அதுசரி! சமுதாயத்தில் மிகமிகச் சிறுபான்மையினரான பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கலை இலக்கியவாதிகளுக்காக மட்டும் எழுதுவது வறட்டுத்தனமானதாக அமையாதா?

"எழுதப் படிக்கத் தெரியாத விவசாயிகளையும் சொல்வதைக் கேட்டுத் தலையாட்டும் நபர்களையுமே கொண்டு என்ன செய்துவிடப் போகிறீர்கள்?" என்று உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் சிந்தனையாளர்களோடு எப்படி ஒரு புரட்சிகர ஏடு இணைந்து செயல்பட முடியும்? எழுதப்படாத காகிதத்தைப் போன்றவர்கள் உழைக்கும் மக்கள்; அதிலே தெளிவான சித்திரம் வரைய முடியும்; ஏற்கனவே கிறுக்கப்பட்ட காகிதத்தில் தெளிவான சித்திரம் வரைய முடியாது என்று மாவோ சொன்னதை நினைவுப்படுத்த விரும்புகிறோம்.

தமிழகத்தில் விவசாயிகளை அமைப்பு ரீதியில் திரட்டும் ஒரே புரட்சிகர அமைப்பாக வி.வி.மு. உள்ளது. இப்பணியிலும், தொழிலாளர்களை அமைப்பு ரீதியில் திரட்டுவதிலும் ம.க.இ.க. துணை புரிகிறது. ஆகவே இப்போது தாக்குதலுக்குரிய சிறப்பான இலக்குகளாக இவ்வமைப்புகளைத் தெரிவு செய்து இவற்றின் முன்னணித் தோழர்கள் மீது தேச துரோக வழக்குகள் போடுகின்றனர்.

● *இன்றைய காலகட்டத்தில், இந்திய சமுதாயத்தின் பிரதான முரண்பாடு என்று எதைக் கணிக்கிறீர்கள்? 'பாசிச அபாயம்' உள்ள காலகட்டத்தில் இந்தியப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் 'முழுவதற்கும்' எதிராக பாசிசத்தை எதிர்த்து நிற்கும் இந்திய மக்களை மட்டும் கொண்டதாக பிரதான முரண்பாடு இருக்கும் என்பதில் உங்களுக்கு உடன்பாடு உண்டென்றால், ராம ஜென்ம பூமி விவகாரத்தில் முலயாம்சிங் யாதவ்வின் வகுப்புவாத எதிர்ப்பு இயக்கத்தை வரவேற்று, ஆதரிப்பது மதவெறி எதிர்ப்பு சக்திகளின் கடமையாகும் என்று அணி சேர்வது - சேரச் சொல்வது - பித்தலாட்டம் அல்லவா?*

**— புதிய சாணக்யன், சென்னை - 33.**



படிப்பகம்

www.padippakam.com

○ நிலப் பிரபுத்துவத்துக்கும், பரந்துபட்ட இந்திய மக்களுக்கும் இடையிலான முரண்பாடுதான் இன்றைய காலகட்டத்தில் இந்திய சமுதாயத்தின் பிரதான முரண்பாடு என்று கணிக்கிறோம். ஆகவே வாசகர் குறிப்பிடும் பிரதான முரண்பாடு என்பதில் எமக்கு உடன்பாடு கிடையாது. அத்வானி முதலிய இந்து மதவெறியர்களுக்கு எதிராக 'வகுப்புவாத எதிர்ப்பு இயக்க'த்தை முலயாம்சிங் யாதவ் மக்களிடம் எடுத்துச் சென்றதன் மீது மிகை மதிப்பீடு செய்துவிட்டோம்; அது ஒரு அரசியல் தவறுதான் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், அவர் பின் அணி சேர்வது, சேரச் சொல்வது என்பது எமது நிலைப்பாடு அல்ல. அயோத்தி பாபர் மசூதியை முஸ்லீம் மக்களுக்கே சொந்தமானது. அவர்களிடமே அதை ஒப்படைக்க வேண்டும் என்பது முதல் பாசிச எதிர்ப்பு இயக்கம் ஆளும் வர்க்கங்கள் முழுவதற்கும் எதிரானதுதான் என்பது வரை எமது நிலைப்பாடுகள் எதிலும் அவ்வாறான கருத்தே கிடையாது.

● *அம்பேத்கர் முதற்கொண்டு மாவீரன் ஜான்பாண்டியன் வரையிலும் சாடி எழுதும் தாங்கள் மேல் சாதி வெறியர்களைப் பெயர் குறிப்பிட்டு எழுதியது உண்டா? குறிப்பாக, தேவர், நாயுடு, அய்யர் சாதிவெறியர்களை எழுதியிருந்தால் வெளியிடத் தயாரா?*

*உங்களைத் தவிர அனைவரும் தவறு செய்து கொண்டிருப்பவர்கள் - பாரதி முதல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வரை - இப்பொழுது சொல்லுங்கள் தங்களைப் போன்ற புரட்சிகரத் தோழர்களான இன்குலாப், இளவேனில், பிரபஞ்சன் பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

***— சாமிநாதன், பரமக்குடி.***

○ ஜான்பாண்டியன் வரிசையில், வகையில் அம்பேத்கரைப் புதிய ஜனநாயகம் வைக்கவில்லை. ஆனால், தானே அப்படி வைத்து வாசகர் எழுதுவது எப்படி நியாயமாகும்? தனது சொந்த, சுயநல - காரிய வாதத்துக்காக தாழ்த்தப்பட்ட மக்களைத் திரட்டி மேல்சாதித் தலைவர்களிடம் அடகுவைக்கும் பிழைப்புவாதி ஜான்பாண்டியன். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதை, முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட சீர்திருத்தவாதி அம்பேத்கர்.

மேல்சாதிவெறியர்களைப் பெயர் குறிப்பிட்டுப் புதிய ஜனநாயகம் எழுதிய பல சான்றுகளைக் கூற முடியும். போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் பி.ராமமூர்த்தி எழுதிய 'திராவிட இயக்கமும் விடுதலைப் போரும்' என்ற நூல் மீதான பு.ஜ.வின் விமர்சனம் ''ஒரு கம்யூனிச துரோகியின் மரண சாசனம்'' என்கிற தொடரில் பல மேல்சாதி கும்பல்களைப் பற்றி, குறிப்பாக பார்ப்பன ஆதிக்கவாதிகள் பற்றி எழுதினோம். அதற்கு முன்னும் பின்னும் - சான்றாக சங்கராச்சாரி ஓடிப்போனது. டி.வி.எஸ்., ஈசன் குரூப் முதலாளிகள் போன்றவை - பலமுறை எழுதினோம்; நேரு - இந்திரா - ராஜீவ் பார்ப்பனத் தன்மைகளைப் பெயர் குறிப்பிட்டு எழுதினோம்.

வாசகர் குறிப்பிடும் ஜான்பாண்டியன் சம்பந்தப்பட்ட போடி சாதிக்கலவரங்களைப் பற்றி எழுதியபோதே தி.மு.க. மந்திரி பொன். முத்துராமலிங்கம் தேவர் சாதியினரைத் தூண்டியது குறித்தும் எழுதினோம். அதே இதழில் சொரப்பூர் சாதிப் படுகொலையில் வெங்கிடராமரெட்டி பற்றி எழுதினோம். காட்டு மன்னார்குடி விவகாரத்தில் வன்னியர் சாதித் தலைவர் ராமதாஸ், கீழ் வெண்மணிப் படுகொலையில் கோபால கிருஷ்ண நாயுடு - இப்படி எவ்வளவு சான்றுகள் வேண்டும்? இப்போது தேவர், நாயுடு, அய்யர் என்று எந்த சாதிவெறியர்களைப் பற்றி எழுதினாலும், உள்ளடக்கம் சரியாக இருக்கும் பட்சத்தில் புதிய ஜனநாயகம் வெளியிடத் தயார்தான்!

''நாங்கள் எப்போதுமே தவறு செய்யாதவர்கள்; எங்களைத் தவிர அனைவரும் தவறு செய்து கொண்டிருப்பவர்கள்'' என்று எப்போதுமே நாங்கள் உரிமை கொண்டாடியது கிடையாது. எங்களது விமர்சனங்களுக்குப் பதில் சொல்ல இயலாதவர்கள், முடியாதவர்கள், அதற்குத் துணியாதவர்கள் தான் விமர்சனங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, வாதங்களில் இருந்து நழுவிக் கொள்வதற்காக எங்களைப் பற்றி அவ்வாறு உரிமை கொண்டாடுவதாக இட்டுக் கட்டுகிறார்கள். இன்குலாப், இளவேனில், பிரபஞ்சன் போன்றவர்கள் புரட்சிகரத் தோழர்கள் அல்ல. மார்க்சியப் போர்வை போர்த்துக் கொண்டுள்ள குட்டி முதலாளித்துவத் தாராளவாதிகள் - அறிவுஜீவிகள் தாம். இன்குலாப்பை மக்கள் கவிஞர் என்று போற்றினார்கள். அவரும் அது கேட்டு மகிழ்ந்து பெருமைப்பட்டுக் கொண்டார். அதை ஏற்காத எங்களைச் சாடினார்கள், தூற்றினார்கள். இப்போது அதுபற்றி அவரும் மற்றவர்களும் என்ன சொல்கிறார்கள். கொஞ்சம் கேளுங்களேன்!

● *மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் (ம.ஜ.இ.க.) என்ற அமைப்பு ஈழ விடுதலைப் போருக்கு உதவி செய்வோம் எனக் கூறி புலிகள் அமைப்புக்கு மருத்துவ உதவி எனச் சொல்லி நிதி உதவி அளித்தும், கையெழுத்து இயக்கம் நடத்தித் தமிழக அரசிடம் வருகிற 30-11-90 அன்று மனு அளிக்க இருக்கிறது. (இக்கடிதம் 17.11.90 அன்றே எழுதியது) இது பற்றித் தங்கள் கருத்தென்ன? மேலும் ஒரு புரட்சிகர அமைப்பு இது போன்ற உதவிகளை ஒரு பாசிச அமைப்புக்கு (பிரபாகரன் குழு) செய்வது சரியான விஷயமாகுமா? இது போன்று நடந்த வரலாற்று நிகழ்ச்சிகள் ஏதுமுண்டா?*

***— ஏகலைவன், திருப்பத்தூர்.***

○ விடுலைப் புலிகள் பாசிச அமைப்பாக சீரழிந்து போய்விட்டதென்று நான்காண்டுகளாகவே நாம் எழுதிவருகிறோம். அதைக் கண்டு கொள்ளாமலும், எதிர்த்து வாதிட்டும் வந்த ம.ஜ.இ.க.வினர் கடந்த ஆகஸ்டில் ஒரு வெளியீடு போட்டுள்ளனர். அதில் விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயக மறுப்பு மற்றும் ஏதேச்சதிகாரப் போக்குடையதாகவும் ஒரு படையின் ஆட்சி அல்லது அனைத்து அதிகாரத்தையும் தனது கையில் ஏகபோகமாக்கிக் கொள்வது என்ற பாசிசக் கொள்கையைப் பின்பற்றுவதாகவும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

''ஒரு குறிப்பான திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவுவதற்கான போராட்டத்தை நடத்த வேண்டியது இன்றைய கட்டத்தில் அனைத்துப் புரட்சியாளர்களினதும் ஜனநாயக வாதிகளினதும் கடமையாக உள்ளது. விடுதலைப் புலிகளின் அமைப்பு உள்நாட்டு யுத்தத்தில் ஊன்றி நிற்கும் வரை, 'பிரேமதாசா அரசு தொடுத்துள்ள தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்த ஈழத் தமிழினத்தின் விடுதலை யுத்தத்தை ஆதரிப்போம்! தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலி அமைப்புடன் ஒன்றுபடுவோம்! ஜனநாயகத்துக்காக அதனுடன் போராடுவோம்!' என்பதே அனைத்து ஈழத்தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டச் சக்திகளின் முழக்கமாக அமைய வேண்டும்'' என்று ம.ஜ.இ.க.வினர் எழுதுகின்றனர். இந்த கொள்கை இதுவரை எந்தக் குழுவும் பின்பற்றாதது போலவும், பின்பற்றியிருந்தால் அக்குழுக்கள் புலிகளுடன் சரியான உறவுகளை ஏற்படுத்தியிருக்கலாம் என்பது போலவும் எழுதுகின்றனர்; இதன் மூலமும், இந்தக் கொள்கையைப் பின்பற்றிய குழுக்களுக்கு என்ன நேர்ந்ததென்ற படிப்பினையைக் குருட்டுத்தனமாக மறுப்பதன் மூலமும் பாசிசப் பிரபாகரன் கும்பலுக்கு ம.ஜ.இ.க. வக்காலத்து வாங்குகிறது. கடைசியாக தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை உட்பட ம.ஜ.இ.க.வினர் கூறும் கொள்கையைப் பின்பற்றிய அமைப்புகள் கூட புலிகளின் பாசிசத்திற்கு பலியானதுதான் அனுபவம். இதை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன.

பாசிசப் புலிகளுக்கு வக்காலத்து வாங்குவது மட்டுமல்ல; புலிகள் தவிர அனைத்துத் தமிழீழப் போராளி அமைப்புகளும் தமது சொந்த அழிவுக்கான முழக்கத்தையே கொள்கையாகக் கொள்ள வேண்டும் என்கிறது ம.ஜ.இ.க. புரட்சிகர அமைப்புகள் எதுவும் இப்படிச் செய்ததாக வரலாறில்லை.

அத்வானி முதலிய
இந்துமதவெறியர்களுக்கு எதிராக
'வகுப்புவாத எதிர்ப்பு இயக்க'த்தை
முலயாம்சிங் யாதவ் மக்களிடம் எடுத்துச்
சென்றதன் மீது மிகை மதிப்பீடு செய்து
விட்டோம்; அது ஒரு அரசியல் தவறுதான்
என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால்
அவர் பின் அணி சேர்வது, சேரச் சொல்வது
என்பது எமது நிலைப்பாடு அல்ல.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ! இந்தக் கூரைக் கொட்டகை தான் ஒரு உயர்நிலைப் பள்ளி. 480 மாணவ, மாணவியர் படிக்கும் இப்பள்ளியின் பழைய கட்டிடம் இடிந்து விழும் நிலை ஏற்பட்டதால் கூரைக் கொட்டகைகள் போட்டு வகுப்புகள் நடக்கின்றன.

இந்தியாவிலிருக்கும் பள்ளிகளில், பாதிக்கும் மேற்பட்டவை இப்படித்தான்; மரத்தடியில், மாட்டுக் கொட்டகையில், குப்பை கூளங்களில்...! கட்டிடம் இல்லை, கட்டிடம் இருந்தால் கூரையில்லை, கூரை இருந்தால் பெஞ்ச் இல்லை, பெஞ்ச் இருந்தால் கரும்பலகை இல்லை, கரும்பலகை இருந்தால் வாத்தியார் இல்லை! இல்லாமையையே அடிப்படையாகக் கொண்டு நாட்டின் கல்லாமையை ஒழிக்கப் போகிறார்களாம் ஆட்சியாளர்கள்; நம்புங்கள்!




நாட்ராம் பள்ளி ஜெயபுரம் உயர்நிலைப்பள்ளி

தையல் இல்லாத அழுக்குச் சட்டை, இடுப்பில் தங்காத கிழிந்த கால்டவுசர், சளி நிற்காத மூக்கு, குத்தும் முட்களே செறுப்பாக அணிந்த கால்கள், சிலேட்டையும் பல்பத்தையும் சத்துணவு தட்டுக்குள் சுமந்து செல்லும் பசையில்லாத தலை... நமது வீட்டுப் பிஞ்சுகள் இப்படி வாழ்வோடு போராடி கல்வி பெற வேண்டிய நிலை!

இதோ இந்த 'டூன்' பள்ளிகளைப் பாருங்கள்! வசந்த் பள்ளத்தாக்கு பள்ளி, சாம் பள்ளத்தாக்கு பள்ளி, வித்யா நிவேதன், ஸ்ரீராம் பள்ளி — இப்படி நகரங்களில் சற்றே உள்ளடங்கிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டுள்ளன. உயர்தர உணவு, நவீன படுக்கை - குளியலறை - கழிப்பறை வசதியுடைய விடுதி, பல மொழிகற்க தனிகூடம், சிறந்த பெரிய நூலகம், அதிகபட்சம் 25 பேர் மட்டுமே அமரும்படியான நவீன இருக்கை வசதிகள் கொண்ட வகுப்பறைகள், நீச்சல் கற்றுக் கொள்ள நீச்சல் குளம், குதிரை சவாரி கற்றுக் கொள்ள புல் படர்ந்த பெரிய மைதானம், நவீன தொழில் முறை பாடங்களைக் கற்றுக் கொள்ள கம்ப்யூட்டர் வசதி... கிட்டத்தட்ட ஒரு ஐந்து நட்சத்திர விடுதிபோல் அனைத்தும் ஒன்றிணைந்த உல்லாச புரி! ''குறைந்தது 100 ஏக்கர் நிலமும் 14கோடி ரூபாயும் இருந்தால்தான் இத்தகைய ஒரு பள்ளியையே கட்ட முடியும்'' என்கிறார் ஸ்ரீராம் பள்ளி முதல்வர் ராம்சந்திராணி. டாட்டா, பிர்லா முதல் வளர்ந்து வரும் தரகு முதலாளி கும்பலான மேக்நைல் அண்டு மேகர் குரூப், ஸ்ரீராம் பைபர் ஒர்க்ஸ், அது புராடக்ட்ஸ், டிராக்டர்கள் தயாரிக்கும் எய்சர் குட்எர்த் உட்பட 'இந்தியா டுடே' பத்திரிக்கை உரிமையாளரான அருண்பூரி வரை அனைவரும்தான் இப்பள்ளிகளை தொடங்கி நடத்தி வருகிறார்கள். 2 வருடத்திற்கு 300 பள்ளிகள் உருவாகும் வண்ணம் தரகு முதலாளித்துவ கம்பெனிகள் இப்பள்ளிகளில் மூலதனமிட்டு வருகின்றன.

குருகுலக் கல்வி - அன்று மன்னர்கள் தங்கள் இளவரசர்களை அரியணை ஏற்றுவதற்கு வேண்டி - கல்வி போதிக்க - ஏற்படுத்திய முறை. இன்று தரகு முதலாளிகள் தங்கள் வர்க்கத்தின் குலக் கொழுந்துகளை அரசு தொழில் நிர்வாக ஆளுமை பெறுவதற்காக உருவாக்கியதுதான் இந்த 'டூன்' பள்ளிகள்!

அரசு (அனாமத்து) பள்ளிகளுக்கு வருட பட்ஜெட்டில் ஏதோ பிச்சை போடுவதுபோல் நிதி ஒதுக்குகிறார்கள் ஆட்சியாளர்கள். மறுபுறமோ மேட்டுக்குடி அதிகார வர்க்க கல்வியளிக்கும் ஐந்து நட்சத்திர குருகுலக் கல்விக்கு அனுமதி - சலுகை - ஊக்குவிப்பு! எத்தனை நாள் இதனை பொறுத்துக் கொள்வது?






படிப்பகம்